பொருளடக்கம்

பக்கங்கள்

01. வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவனம் பற்றி	01
02. 2022 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நிலவிய நிதி செயலாற்றுகை தொடர்பான மதிப்பீடு	02
03. தலைவரின் செய்தி	03
04. தலைமை நிறைவேற்று அதிகாரியின் செய்தி	04
05. நிதி மற்றும் நிதி அல்லாத சிறப்பம்சங்கள்	
5. 1 முக்கிய செயற் திறன் குறிகாட்டிகள்	08
5. 2 கிளை வலையமைப்பு	10
06. கூட்டுத்தாபன நிர்வாகம்	12
07. நிதியியல் அறிக்கைகள்	
7. 1 நிறுவனத்தின் இயக்குனர்கள் குழுவின் ஆண்டு அறிக்கை	13
7. 2 பிரதி பொது முகாமையாளர் - பொறுப்புகள் சார்ந்த நிதிக் கூற்று	16
7. 3 தன்னாதிக்க கணக்காய்வாளரின் அறிக்கை	17
7. 4 இலாபம் அல்லது நட்டம் மற்றும் விரிவான வருமானம் பற்றிய அறிக்கை	28
7. 5 நிதி நிலைக் கூற்று	29
7. 6 உரிமை மாற்றம் பற்றிய கூற்று	31
7. 7 காசுப் பாய்ச்சல் கூற்று	32
7. 8 நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்	34

01. வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவனம் பற்றி

இந் நாட்டில் வாழக் கூடியோருக்குத் தேவையான நுகர்வுப் பொருட்களை மிகவும் நியாயமான விலையில் வழங்குவதையும், சந்தையில் பண்டங்களுக்கு எவ்விதத்திலும் பற்றாக்குறை ஏற்படாத வகையிலும் நுகர்வோருக்கு தரமான சேவையை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டு 2005 ஒக்டோபர் மாதம் 25 ஆம் திகதி லங்கா சதொச நிறுவனம் நிறுவப்பட்டது.

வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவனம், 2007 ஆம் ஆண்டின் இலக்கம் 07 ஐ உடைய கம்பனிகள் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட நிறுவனமொன்றாக பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் கொழும்பு 02, வொக்ஷோல் வீதியில் இலக்கம் 27, சதொச செயலகக் கட்டிடத்தில் அமைந்துள்ளது. இந் நிறுவனத்தின் விற்பனை நிலையங்கள் நாடு முழுதும் பரம்பியதாகக் காணப்படுகின்றன. 2022 ஆம் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட விற்பனை நிலையங்களின் மொத்த எண்ணிக்கை 442 ஆகக் காணப்பட்டது.

எமது தூர நோக்கு

இலங்கைக் குடிமக்களினது உண்மையான வாழ்க்கைச் செலவை பிரதிபலிக்கக் கூடிய தேசத்தின்

விலை நிர்ணயிப்பாளராக செயற்படுதல்.

எமது பணி நோக்கு

வாழ்க்கைச் செலவைக் குறைத்தல், நாட்டிலுள்ள பொது மக்களுடன் கூட்டிணைந்து பொறுப்பு மிக்க சமூகத்தை தொடர்புறுத்துதல், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழிற் துறைகள் (SMEs) ஒன்றுக்கொன்று தொடர்புபடக் கூடிய வாய்ப்பை ஏற்படுத்துவதன் மூலம் திறமை மிக்க உயர் வாடிக்கையாள சேவையை வழங்குதல்

02. 2022 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நிலவிய நிதி செயலாற்றுகை தொடர்பான மதிப்பீடு

2005 ஆம் ஆண்டில் நிலை நாட்டப்பட்ட லங்கா சதொச நிறுவனம், இலாபமீட்டக் கூடிய நிறுவனமாக இயங்கி வந்திருப்பினும், அரிசியை இறக்குமதி செய்யும் செயற்பாட்டில் ஈடுபட்ட காரணமாக 2014 ஆம் ஆண்டு காலப் பகுதியிலிருந்து நட்டத்தில் இயங்கக் கூடிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

எனினும், லங்கா சதொச நிறுவனம் நட்டத்தில் இயங்குவதைக் குறைத்த வாறு இலாபமீட்டலை நோக்கி பயணிக்கத் தக்க வல்லமையைப் பெற்றுள்ளது. 2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில் காணப்பட்ட ரூபா 840 மில்லியன் நட்டத்துக்கு நிகராக, 2022 ஆம் ஆண்டில் ரூபா 35 மில்லியன் வரை அந் நட்டத்தக் குறைக்கக் கூடிய திறன் கிடைத்தமையின் மூலம் இது தெட்டத் தெளிவாகின்றது.

2022 ஆம் ஆண்டில் மேம்படுத்தப்பட்ட நிதி செயலாற்றுகை தொடர்பாகப் பங்களிப்பு செய்த பிரதான காரணியாக, நட்டத்தில் இயங்கிய விற்பனை நிலையங்களை மூடிய வண்ணம் நிதியியல் ரீதியாக சாத்தியப்பாடான இடங்களை நோக்கிய பயண ஆரம்பமே ஏதுவாக அமையப் பெற்றது. இதன் வாயிலாக தொடர்ச்சியாக நட்டத்தைத் தழுவிய வண்ணம் இயங்கிய நிலை படிப்படியாகக் குறைவடந்துள்ளது.

2022 ஆம் ஆண்டில் லங்கா சதொச நிறுவனத்துக்கு தாம் சந்தித்த நட்டத்தில் இயங்கிய நிலையைக் குறைக்கக் கூடிய திறன் கிடைத்தது. வட்டி விகிதங்கள் அதிகளவில் நிலவிய போதும் நிறுவனம் இவ் வருட கால கட்டத்தில் 195% ஆன அதீத வளர்ச்சியைத் தழுவியது.

2021 ஆம் ஆண்டுக்கு நிகராக, மின்சாரம் மற்றும் எரிபொருள் நெருக்கடி நிலைக்கு மத்தியிலும், பண வீக்க அழுத்த நிலைக்கு மத்தியிலும் பொதுச் செயற்பாடுகள் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தன. மின் பிறப்பாக்கி இயந்திரங்கள் அதிகளவில் பயன்படுத்தப்பட்டமையால் எரிபொருள் செலவின் அதிகரிப்பு 388% ஆகக் காணப்பட்டது. 2021 ஆம் ஆண்டுக்கு நிகராக சில்லறை மளிகைப் பைகளின் செலவு 82% ஆகக் காணப்பட்டதுடன், போக்குவரத்துச் செலவு 39% இனால் அதிகரித்திருந்தது. 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் வெப்பக் கடதாசி மற்றும் ஏனைய அச்சிடல் ஆவணங்களின் செலவுகளுடன் தொடர்புடைய அச்சிடல் செலவு 3 மடங்கினால், அதாவது 325% இனால் அதிகரித்திருந்தது.

2022 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நிலவிய சவால் மிக்க நிலைக்கு மத்தியிலும், பொதுச் சேவைகளில் குறிப்பிடத்தக்களவாக விருத்தியை எய்தக் கூடிய திறன் கிடைத்திருப்பினும், 2022 ஆம் ஆண்டு காலப் பகுதியில் லங்கா சதொச நிறுவனத்துக்குத் தாம் சந்தித்த நட்டத்தில் இயங்கும் நிலையை மிகத் குறைவான மட்டத்துக்கு கொண்டு வரக் கூடிய திறன் கிடைத்தது. குறிப்பாக இவ் வருட காலப் பகுதியில், நிறுவனத்துக்கு மீண்டு வரும் செலவினங்களுக்கென திறைசேரியிடமிருந்து எவ்வித நிதியமும் கையளிக்கப்படவில்லை எனும் விடயத்தை குறிப்பாக சுட்டிக் காட்டலாம்.

மேற்குறித்த வகையில் நிறுவனத்துக்கு இன்னோரன்ன சவால்கள் காணப்பட்ட போதிலும், 2022 ஆம் ஆண்டில் நிதி செயலாற்றுகை விருத்தியை உற்று நோக்குகையில், ஆண்டு வருமான ஈட்டுகை வளர்ச்சி 40% ஆகவும், 2021 ஆம் ஆண்டு காலப் பகுதியுடன் ஒப்பிடுகையில் நிகர இலாப வீதம் 12% இலிருந்து 12.8% வரை அதிகரித்திருத்தல் ஆகிய விடயங்கள் இந் நிலைக்குப் பெருமளவில் பங்களிப்பை வழங்கியுள்ளன.

மேலும், லங்கா சதொச நிறுவனம் குறித்த வருட கால கட்டத்தில் அதன் உழியர்களுக்கு எவ்வித ஊக்கக் கொடுப்பனவுகளையோ அல்லது வெகுமதிகளையோ வழங்குவதில்லை எனும் திடமான முடிவை எடுத்திருந்தமையால், இம் முடிவு அடி மட்ட நிலையில் சாதகமான விளைவை ஏற்படுத்துவதற்கு ஏதுவாக அமைந்தது.

03. தலைவரின் செய்தி

2022 டிசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த வருட காலப் பகுதி தொடர்பான வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களை பணிப்பாளர் சபை சார்பாக முன் வைக்கக் கிடைத்தமை மகிழ்ச்சிகரமான விடயமாகக் காணப்படுகின்றது.

சவால்களை வெற்றி கொள்ளுதல்

2022 நிதி ஆண்டு அனைத்து வகையிலும் வியக்கத்த வருடமாகக் காணப்பட்டது. COVID 19 தொற்று நோயின் காரணமாக ஏற்பட்ட பொருளாதாரத் தாக்கம், அரசியல் நிலைத் தழும்பல், நுகர்வுப் பண்டங்களின் விலையேற்றம், உள் நாட்டுப் பண வீக்கம் மற்றும் ரூபாயின் பெறுமதி நலிவடைந்தமை போன்ற பொருளாதாரத் தாக்கங்களிலிருந்து மீழ்வதற்கு உள் நாட்டுப் பொருளாதாரம் அக்கால கட்டத்தில் போட்டியிட்ட வண்ணமிருந்தது.

நிதி ஆண்டில் இறுதிக் காலாண்டில் நாடு எரிவாயு மற்றும் எரிபொருள் தட்டுப்பாட்டு நிலைக்கு முகங் கொடுத்திருந்ததுடன், வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவனம் (LSL) மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு இன்னோரன்ன சவால் மிக்க நிலைக்கு மத்தியில் உபாய வழித் திட்டங்களை செயற்படுத்துவதற்கான வழி காட்டிகளை சுட்டிக் காட்டிய வண்ணம் தமது வெற்றிப் பாதையில் நடைபோட்டன.

முதலீடுகள்

வெளித்தரப்பு சவால்களுக்கு மத்தியிலும் எமது முதலீடுகள் மற்றும் விஸ்தீரணமான திட்டங்களுடன் கூட்டிணைந்த வண்ணம் எமது செயற்பாடுகளை முன்னோக்கி நகர்த்தும் பொருட்டு வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவனம் உபாய வழித் தீர்மானங்களுக்கு வந்தது. தேர்ந்தெடுக்கப்பட்ட முதலீடுகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட சொத்துப் பயன்பாட்டின் ஊடாக கொள்திறன் விருத்தி மற்றும் சந்தைப் பங்குகளின் விரிவாக்கத்திற்கு மென்மேலும் வழிகாட்டுவதற்கு முகாமைத்துவம் முயற்சித்துக்கொண்டிருக்கிறது.

செயலாற்றுகை

2022 ஆம் ஆண்டு காலப் பகுதி நிறுவனத்திற்கு மிகச் சிறந்த முன்னேற்றமான வருட காலமாகக் காணப்பட்டது. கலந்தாலோசிப்பு வருட கால கட்டத்தில் நிறுவனம், மொத்த வருமானமாக ரூபா 57.2 பில்லியனை ஈட்டியிருப்பதாக அறிக்கையிடப்பட்டிருப்பதுடன், அது முன்னைய வருட காலப் பகுதியை விட 40% ஆன விருத்தியாகக் காணப்படுகின்றது. அதனடிப்படையில், நிகர நட்டமும் ரூபா 35.4 மில்லியன் வரை, அதாவது 97% இனால் குறைவடைந்தது. நுண்ணியல் பொருளாதார நிலைகள் காரணமாக மேலெழக் கூடிய விற்பனை செலவு அதிகரிப்பு காரணமாக செயல் முறைச் செலவுகள் ரூபா 56.3 பில்லியன் ஆன சிறு அதிகரிப்பைக் காட்டியது.

உபாய வழிகள்

பண வீக்கம் மற்றும் ஏனைய நுண்ணியல் பொருளாதாரக் காரணிகள் காரணமாக பாதிப்புக்குள்ளான நுகர்வோருக்கு எவ்விதச் செலவு அதிகரிப்பும் ஏற்படாத வண்ணம், விலையேற்றத்தை செயற்படுத்தாதிருப்பதற்கு முகாமைத்துவம் கூட்டாகத் தீர்மானித்தது. எந்தவொரு விலையேற்றத்தையும் கட்டுபடுத்துதல், பண்டங்களின் அளவை அதிகரித்தல் மற்றும் இலாபமீட்டலை அதிகரித்தல் தொடர்பாக முகாமைத்துவம் கவனம் செலுத்தியுள்ளது. விடயப் பரப்பின் கீழ் இன்னல் மிக்க காலப் பகுதியில் எமது குழுக்களுக்கு இம் மூன்று சவால்களையும் எதிர் கொள்ளக் கூடிய திறன் கிடைத்ததென நாம் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம். நடுத்தர சந்தை வணிக நிலைகளின் போது, நுகர்வோருக்கு விரைவில் பழுதடையக் கூடிய பண்டங்கள் மற்றும் பொருட்களின் விலைகளைக் குறைக்கும் பொருட்டு வழங்குநர்களுடன் கூட்டாக எமது தொழிற்சார் தொடர்புகள் மென்மேலும் ஆழமாக கட்டியெழுப்பப்பட்டதுடன், நுகர்வோக்கு மிகச் சிறந்த விலைகளின் கீழ் பண்டங்களை பெற்றுக்கொடுக்க கூடிய வாய்ப்பைத் தோற்றுவிப்பதற்கு எமது குழுக்கள் முழுமையாக தம்மை அர்ப்பணித்திருந்தன.

எதிர்க்கால கண்ணோட்டம்

அத்தியாவசியமான பொருட்களின் விலை குறைவடைதல், சந்தை வட்டி வீதம் குறைவடைதல், மின்சாரம், எரிபொருள், நுகர்வுச் செலவை நடப்பு நிலைக்கு கொண்டு வறுதல் மேலும் நாட்டின் நுண்ணியல் பொருளாதார சுற்றுச் சூழலின் கீழ், நிறுவனம் எதிர்க் கொள்ளவுள்ள எதிர்க்கால வாய்ப்புகள் தொடர்பாக எமது முகாமைத்துவம் தீர்மானங்கள் எடுக்கபட்டதுடன். சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முனைவுப் பிரிவின் மறு மலர்ச்சியின் கீழ் முன் நோக்கி நகர்ந்த வண்ணம் செலவு தொடர்பாக மிகச் சிறந்த நன்னெறி மிக்க தீர்மானங்கள் எட்டப்பட்டதுடன், நிறுவனத்தின் அனைத்துச் செயற்பாடுகளிலும் செலவு முகாமைத்துவம் மற்றும் செலவின் மூலமான வினைத் திறனை மேம்படுத்தக் கூடிய உபாய வழிகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

ஒப்பளிப்பு

இடர் மிக்க காலப் பகுதிகளில் பின்பற்றப்பட்ட தூர நோக்குள்ள வழிகாட்டிகள் மற்றும் உதவிகளுக்கு பணிப்பாளர் சபைக்கு எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவிக்கின்றேன். அவ்வாறே, வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவனத்தின் பணிக் குழுவுக்கு அவர்களது அர்ப்பணிப்பு, உழைப்பு, அயராத பங்களிப்பு மற்றும் தொடர் முயற்சிகளுக்கும் எனது நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

எமது தயாரிப்புகளுக்கு அனுசரணை வழங்கியவாறு வண்ணம், வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவனம் மீது வைத்துள்ள தொடர் நம்பிக்கை மற்றும் நற்தனைகுறித்து எமது வழங்குநர்கள், வங்கியாளர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் ஏனைய தரப்பினருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிக்கின்றேன் .

பணிப்பாளர் சபை மற்றும் எமது பணிக் குழுக்கள் தொடர்பாக வைத்துள்ள நம்பிக்கை, நற்பெயர் தொடர்பாக எமது பங்குரிமையாளர்களுக்கு மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவிப்பதுடன், எதிர்வரும் காலப் பகுதிகளிலும் தங்களது முதலீடுகளுக்கு அதி கூடிய பெறுமதியை பெற்றுகொடுப்பதற்கு நாம் தொடர்ந்தும் நடவடிக்கை எடுப்போமென நான் உறுதியளிக்கிறேன்.

பசந்த யாபா அபேவர்தன
தலைவர்
லங்கா சதொச நிறுவனம்

04. தலைமை நிறைவேற்று அதிகாரியின் செய்தி

அன்பான பங்குதாரிகள், வாடிக்கையாளர்கள் மற்றும் குழு அங்கத்தவர்களுக்கு ,

நன்றி பூர்வமாகவும், பெருமிதத்துடனும் 2022 நிதி ஆண்டுக்கான எமது வருடாந்த அறிக்கையை இத்தால் நான் முன் வைக்கின்றேன். இதன் ஊடாகக் கடந்த வருடத்தில் எமது நிறுவனம் அடைந்த குறிப்பிடத்தக்களவான வெற்றிகள் மற்றும் முன்னேற்ற நிலைகள் தொடர்பாகவும், தொடர்ச்சியாக விஸ்தீரணமடைந்து வரும் வண்ணமுள்ள சில்லறை சந்தைக்கு முகங் கொடுக்கக் கூடிய திறன் மற்றும் புதிய ஆக்கங்களுடன் கூட்டிணைந்த வாறு முன் நோக்கி செல்ல கூடிய திறன் தொடர்பாகவும் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

எமது சாதனைகள்

2022 ஆம் ஆண்டு கால கட்டத்தில் சில்லறை வியாபாரத்தின் முன்னணி நிறுவனமாக எமது நிலைப்பாட்டை வலுவுட்ட பல்வேறு அபிவிருத்தி மைல் கற்களைத் தாண்டவேண்டியிருந்தது. நாம் புதிய விற்பனை நிலையங்களை ஆரம்பித்து எமது பயணத்தை விஸ்தீரணப்படுத்தியுள்ளோம். இதனிடையே 1000 திற்கும் மேற்பட்ட புதிய பொருட்களை சந்தைக்கு அறிமுகபடித்திவுள்ளோம், நவீனமயப்படுத்தப்பட்ட இணைய தளத்தின் ஊடாகவும், கையடக்கத் தொலைபேசி பயன்பாட்டுச் செயலி ஊடாகவும் எமது நிகழ் நிலை சார்ந்த சந்தை வாய்ப்பை விருத்தி செய்துள்ளோம். எமது செயற்பாடுகளுக்குத் தொடர்ச்சியாக நீடித்து நிலைக்கக் கூடிய பயன்பாடுகளை ஒன்று சேர்ப்பதற்கு நாம் முயன்றதன் வாயிலாக நன்னெறி மிக்க பலன்களை எய்தக் கூடிய திறனை நாம் அடைந்திருப்பதுடன், அதன் பலனாக எமது காபன் பாதச் சுவடிகள் குறைக்கப்பட்டு, எமது பொதியிடும் உறைகளில் அதிகளவில் மீள் சுழற்சி மூலப் பொருட்களை பயன்படுத்தக் கூடிய திறனும் எமக்குக் கிடைத்துள்ளது.

நிதி செயலாற்றுகை

மேற்காடறப்பட்டவாறு எமது உபாய வழி முதலீடுகள் மற்றும் செயலாற்றுகை வினைத் திறன் காரணமாக இவ் வருடத்தில் எமது நிதிச் செயலாற்றுகை வலுவடைந்துள்ளது. இவ் வருடத்தில் நாம் ரூபா 57 பில்லியன் வருமானத்தை வெற்றிகரமாக ஈட்டியதுடன், முன்னைய ஆண்டினை விட 40% ஆன வளர்ச்சியாகக் காணப்படுகின்றது. இவ்விருத்தி எம்முடன் அர்ப்பணிப்புடன் பணியாற்றுகின்ற ஊழியர்கள் புதிய உபாய வழிகள் மற்றும் பெறுமதி, தொடர்பாக வாடிக்கையாளர்கள் எம் மீது வைத்துள்ள நம்பிக்கையை உறுதிபடுத்துவதாக கருதப்படுகிரது.

புத்தாக்கம் மற்றும் நுகர்வோர் கவனம்

புத்தாக்கம் எனும் விடயம் எமது மூலோபாய வழிகளின் உயிர் நாடியாகக் கருதப்படுகிரது. இவ் வருடத்தில் நாம் செயற்கை நுண்ணறிவின் (AI) கீழான தனி நபர் விற்பனை நிலைய சவாரி தொடர்பான பரிந்துறைகள் உட்பட அதிகளவில் பிரச்சாரம் செய்யப்பட்ட விசுவாசமுள்ள loyalty நிகழ்ச்சி உட்பட பாவனையாளர்களது அனுபவங்களை விஸ்தீரணப்படுத்தும் நோக்கில் பல செயற்பாடுகளை முன்னெடுத்தோம். எமது பெயரீட்டுடன் அனைத்து வகையான உப செயற்பாடுகளிலும் தெளிவான மற்றும் பலன் கிடைக்கின்ற தன்மையை உறுதிப்படுத்திய வண்ணம் எமது வாடிக்கையாளர்களது எதிர்ப்பார்ப்புகளை புரிந்து கொள்வதற்கும், அதனை அடைவதற்கும் நாம் அர்ப்பணிப்புடன் செயலாற்றிய வண்ணமுள்ளோம்.

நிலைதன்மைக்கான அர்ப்பணிப்பு

நிலைப்பேறான தன்மை எனப்படுவது, புகழ் பெற்ற சொல் மாத்திரமன்றி அது எமது வர்த்தக மூலோபாய வழியின் பிரதான அங்கமாகவும் காணப்படுகின்றது. பல்வேறு நிறுவன ரீதியான சமூகப் பொறுப்பு நிகழ்ச்சிகளின் ஊடாக கழிவுகளைக் குறைத்தல், வலுச் சக்தியின் வினைத்திறனை விருத்தி செய்தல் மற்றும் மக்களுக்கு உதவும் பொருட்டு எமது தொடர்ச்சியான செயற்பாடுகளின் வாயிலாக சுற்றாடல் சார்ந்த பொறுப்புடைமை தொடர்பான எமது அர்ப்பணிப்பும் வெளிக் காட்டப்படுகின்றது. நாம் அடைந்துள்ள வெற்றிகள் தொடர்பாக நாம் பெறுமிதமடைவதுடன், சுற்றாடலுக்கும், சமூகத்துக்கும் நன்னெறி மிக்க பலன்களை கையளிப்பதற்கு நாம் எம்மை அர்ப்பணித்துள்ளோம்.

முன்னோக்கு பார்வை

எதிர்க்காலம் சுபீட்சம் மிக்க வாய்ப்புகளைத் தன்னகத்தே கொண்டதாக எம்மை முன் நோக்கி வந்த வண்ணமுள்ளது. நாம் தொடர்ச்சியாக தொழில்நுட்பத்துக்கு அதிகளவில் முதலிடுகின்றோம். எமது உற்பத்திக் கையளிப்புகளை விரிவுபடுத்திய வாறு நாம் செயற்படுகின்றோம். மேலும் எமது வளற்ச்சி தொடர்பாக சந்தை வாய்ப்புகளை ஆராய்ந்த வண்ணமுமுள்ளோம். எமது வாடிக்கையாளர்களுக்கு விசேடமான பெறுமதி மிக்க பலன்களைக் கையளித்தல், எமது பங்குதாரிகளுக்கு நீண்ட கால பெறுமதியை உறுவமைத்தல் மற்றும் எமது நிறுவனத்தில் புத்தாக்க மற்றும் கலாச்சார ஊடுறுவலை வலுப்படுத்துதல் போன்ற செயற்பாடுகள் தொடர்பாக நாம் அதிகளவில் கவனம் செலுத்திய வருகின்றோம்.

நன்றி நவிழ்தல்

எமது ஊழியர்களது அயராத உழைப்பு , அர்ப்பணிப்புடனான பங்களிப்பு , எமது வாடிக்கையாளர்கள் எம்மீது வைத்துள்ள நம்பிக்கை , எமது தூரநோக்கு தொடர்பாக அவர்களது இணக்கம் மற்றும் நம்பிக்கை தொடர்பாக எமது பங்குதாரிகளுக்கு எனது மனப்பூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன். நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து வலுவான அடித்தளத்தைக் கட்டியெழுப்பியிருப்பதுடன், புதிய ஆக்கங்களை கண்டறியும் எதிர்க்காலப் பயணத்தை நாம் ஆரம்பித்துள்ளோம்.

எமது இப்பயணத்தின் பங்குதாரியானமைக்கு உங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்
உணமையுள்ள,

எஸ். எஸ். சேனாவத்த
தலைமை நிறைவேற்று அதிகாரி
வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவனம்

வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவனத்தின் முக்கியத்துவம்

குறைந்த விலையில் அத்தியாவசிய பொருட்களை வழங்குதல்

வரையறுக்கப்பட்ட லங்கா சதொசா நிறுவனம் குறைந்த விலையில் அத்தியாவசிய பொருட்களை வழங்குவதில் முன்னணி நிறுவனமாக இருந்து வருகின்றது. துரிதமாக நகர்கின்ற நுகர்வுப் பண்ட விற்பனைத் துறையின் அரச நிறுவனமாக, வரையறுக்கப்பட்ட லங்கா சதொசா நிறுவனம், அத்தியாவசியமான பொருட்களின் விலைகளை குறைவாகப் பேணும் முயற்சிகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றது. முன்னணி அங்காடி விற்பனை நிலையங்களும் இத்தகைய பண்டங்களை விற்பனை செய்த வண்ணமமிருப்பினும், வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவனம் சந்தையில் பண்டங்களின் விலைகளை கட்டுப்படுத்தும் அமைப்பாக செயற்பட்டுள்ளது.

நாட்டில் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்.

வரையறுக்கப்பட்ட லங்கா சதொசா சிருவனத்தில் எந் நேரமும் அத்தியாவசிய பொருட்களை மக்கள் பெற்றுக்கொள்ளணம் உறுதிப்படுத்துகின்றது. கொவிட் - 19 தொற்று நோய் பரவலின் போது இந்திசவனத்திள் செயற்பாடுகள் இதற்குச் சிறந்த உதாரணமாகும். நோய்த் தொற்று அதி உச்சத்தில் காணப்பட்ட தருணத்தில், வரையறுக்கப்பட்ட லங்கா சதொசா நிறுவனம் அதன் விற்பனை நிலையங்களை திறந்நிறந்துவைத்த முதலாவது நிறுவனமாகக் காணப்படுகின்றது. மேலும் அந்நோய்ப் பரவல் உச்ச கட்டத்தில் நிலவிய கால கட்டத்திலும் நாட்டில் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் ஒரே நோக்கத்துடன் தொடர்ந்து செயற்பட்டது. இயற்கை பேரழிவுகள் ஏற்பட்டாலும், வரையறுக்கப்பட்ட லங்கா சதொசா நிறுவனம் நாட்டின் அனைத்து பிரதேசங்களுக்கும் அத்தியாவசியமான நுகர்வுப் பொருட்கள் கிடைக்கும் படியாகத் தனது நடவடிக்கைகளை முன்னெடுதனெடுத்துக்கொண்டிருக்கிறது.

05. நிதி மற்றும் நிதி அல்லாத சிறப்பம்சங்கள்

5.1 முக்கிய செயற் திறன் குறிகாட்டிகள்

அளவுத் திட்டம்		2021 வருடம் முதல் நாள் வரை	2022 வருடம் முதல் நாள் வரை
செயற்பாட்டு முடிவுகள்			
வருமானம்	ரூபா மில்லியன்	40,851	57,165
மொத்த இலாபம்	%	11.97%	12.8%
வட்டி மற்றும் வரிகளுக்கு முன்னைய வருமானம்	%	-1.17%	1.97%
நிகர இலாபம் (நட்டம்)	%	-2.06%	-0.06%
விற்பனை செலவு சதவீதத்தில்			
பிற வருமானம்	%	1.42%	0.62%
நிர்வாக செலவுகள்	%	4.64%	3.58%
விற்பனை மற்றும் விநியோக செலவுகள்	%	9.92%	7.87%
நிகர நிதி செலவு	%	0.88%	1.91%
பணியாளர் நன்மைகள்			
சம்பளம் மற்றும் ஊதியம்	ரூபா.	168,315,884	184,426,374
மேலதிக வேலை நேரக் கொடுப்பனவு மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்	ரூபா.	29,178,707	27,146,482
மொத்த செலவு	ரூபா.	197,494,591	211,572,857
பணியாளர்களின் எண்ணிக்கை		3,414	3,213
ஒரு பணியாளருக்கான செலவு	ரூபா.	57,848	65,849
பணி மூலதன முகாமைத்துவம்			
நடப்பு விகிதம்	நேரம்	0.52	0.61
சரக்கு மீண்டு வரும் காலப் பகுதி	நாட்கள்	49	57
கடனாளி வசூலிப்பு காலப் பகுதி	நாட்கள்	42	25
கடன் தீர்வு காலப் பகுதி	நாட்கள்	71	57
இயக்க சுழற்சி வட்டம்	நாட்கள்	20	25


2018 - 2022 காலப் பகுதிக்கான வருமானம்
இலங்கை ரூபா. மில்லியன்
70,000
60,000
50,000
40,000
30,000
20,000
10,000
-
29,983
25,965
35,579
40,821
57,165
2018
2019
2020
2021
2022


2018 - 2022 தேறிய இலாபம் / (நட்டம்)
இலங்கை ரூபா. மில்லியன்
-
-1,000
-2,000
-3,000
-4,000
-5,000
-6,000
2018
2019
2020
2021
2022
-1,945
-5,130
-1,388
-840
-35

5.2 கிளை வலையமைப்பு


கிளைகளின் எண்ணிக்கை 2018 - 2022
450
440
430
420
410
400
390
380
403
421
415
441
442
2018
2019
2020
2021
2022


மாவட்ட ரீதியாக கிளைகளின் எண்ணிக்கை
மத்திய மாகாணம் - 53
கிழக்கு மாகாணம் - 18
வட மத்திய மாகாணம் - 31
வட மேல் மாகாணம் -38
சபரகமுவா - 44
வடக்கு மாகாணம் - 15
தென் மாகாணம் - 71
ஊவா மாகாணம் - 26
மேல் மாகாணம் - 145

கிளை விபரங்கள்

மேல் மாகாணம	மேல் மாகாணம	மேல் மாகாணம	தென் மாகாணம்	தென் மாகாணம்	மத்திய மாகாணம்	மத்திய மாகாணம்	கிழக்கு மாகாணம்	வட மத்திய மாகாண	வட மேல் மாகாண	வடக்கு மாகாணம்	சபரகமுவா மாவட்	ஊவா மாகாணம்
ஆடி அம்பலம	கிரிபத்கொட	பாணதுற 2	அக ன க ேலபலஸ்ஸ	பிட்டிகல	அகரபத்தன	தலவாகலை	அக்கறைபத்து	அனுராதபுரம் 1	அம்பன்பொல	அச்சுவெலி	அயகம	படல் கும்புர
அலுபோமுல்ல	கிரில்லவள	பாணதுற 3	அஹங்கம	பொத்தல	அளவதுகொட	தென்னக்கும்புர	அம்பாறை 01	அனுராதபுரம் 2	அலவ்வ	அடம்பன்	பலங்கொட 2	பதுளை
அளுத்கம	கி ரி்நதி வா லா	பாணதுற 4	அகுரெஸ்ஸ	ரஜ்கம	அலுவிஹாரே	வலபனே	அம்பாறை 02	அனுராதபுரம் 3	ஆனமடுவ	சாவகச்சேரி	புலத்கொஹுபிட்டிய	பண்டாரவெல
அத்துருகிரிய	கிரிந்திவெல	பனா க ெட	அம்பலங்கொட	ரன்ன	அம்பதென்ன	வெளிகல்ல	மட்டக்களப்பு	அரலகங்வில	பிங்கிரிய	சுன்னாகம்	தெஹி ஓவிட்ட	பண்டாரவெல 2
அத்திடிய	கிவுலாவத்த	பன்னிபிட்டிய 2	அம்பலந்தொட்ட	ரத்கம	அங்கும்புற		தெஹி அத்தகண்டிய	பகமூன	சிலாபம்	யாழ்ப்பாணம்	தெரனியகல	பிபிலே
அவிஸ்ஸாவெள்ள	கோரலைம	பன்னிபிட்டிய 3	அம்பலந்தொட்ட 2	சூரிய வெவ	பெலியங்கட		ஏறாவூர்	புல்னேவ	தங்கொட்டுவ	கிளிநோச்சி மெகா	எஹெலியகொட	பொரலந்த
பதுரெலிய	கொஉறவல	பஸ்யால	பத்தகம	தங்காலை	பொக்காவள		ஹிங்குரான	எப்பாவல	கிரிஉல்ல	மடு	அம்பிலிபிட்டிய 1	புத்தல 2
பளும்மஹர	கொஸ்கம	பயாகல	பலபிட்டிய	தல்கஸ்வல	தம்புள்ளை		கல்முனை	கலேண்பிந்துனு வெவ	ஹெட்டிபொல	மாஞ்சோலை	அம்பிலிபிட்டிய 2	மத்திய முகாம்
பம்பலபிட்டிய	கொஸ்வத்த	பிலியந்தல 1	பரவ கும்புர	தங்காலை 02	தந்துரே		கிண்ணியா	கல்கமுவை	ஹிரிபிட்டிய	மன்னார்	கொடகவெல	தம்பகல்ல
பண்டாரகம	கொட்டதெனியாவ	பிலியந்தல 2	பெலி அத்த	தவளம	தெல்தோட்ட		மனம்பிட்டிய	கல்லல்ல	இப்பன் கமுவ	முத்தூர்	கோண கல்தெனிய	எல்ல
பத்தரமுல்ல	கொட்டஹென	பிட்டகோட்டே	போகஹகொட	தெல்வத்த	திகன		ஓட்டமாவடி	ஹபரண	கற்பிட்டி	நெலு குளம்	குருகல்ல	எதிலி வெவ
போகுந்தர	கொட்டாவ 2	பிட்டிபன	தெனியாய	தெளிஜ்ஜவில	எத்கல		போல்வளே கொலனி	ஹிங்குரக்கொட	கட்டு நேரிய	பேசாலை	ஹம்பேகமுவ	ஹாலிஎல
போல்லேகல	கொட்டாவ 3	பொத்தர முல்ல	தெய்யந்தாரா	தி ஹா க ெட	கலகெதர		பொத்துவில்	ஹொரவ்பொத்தான	கட்டு பொத	பருத்தித் துறை	ஹெம்மாதகம	கந்தகெட்டிய
பொரலஸ்கமுவ 1	மகல்லம்	பொல்கஸ் ஓவிட்ட	தபெரவா வா	திஸ்ஸ மஹாராம	கலேவெல		சம்மாந்துறை	கெபிதிகொல்லேவ	கொஸ் கஹந்திய	சிலாவத்துறை	கஹவத்த	கதிர்காமம்
பொரல்லை	மடபாத	பூகொட	தவேி ந ்வரா	உடுகம	கலேவெல 2		திருக்கோவில்	கஹட்ட கஸ்திகிலிய	குளியாப்பிட்டி	வவுனியா	கலவான	லுனுகல
புலத்சிங்கள	மடபாத எக்ஸ்பிரெஸ்	புவக்பிட்டிய	திக்வெல்ல	ஊரகஸ் மன் ஹந்தி	கம்பளை 01		திருகோணமலை	கெகிராவ	கும்புக் கட்டே		கன்னத்தொட்ட	மெதகம
தளுகம	மக்கொன	ரத்தொலுகம	திக்கும்புற	உறல	கம்பளை 02		உஹன	மெதவச்சிய	குருணாகலை 2		கரண்டுபான	மீகஹ கிவுல
தெல்கொட	மஹரகம 1	ராகம	எல்பிட்டிய	ஊறுபொக்க	கெலிஓய		வாரி பதன்சென்னை	மெதிரிகிரிய	மதுரன்குளி		கரவனல்ல	மொனராகலை 2
தெல்கந்த	மஹரகம 2	ரைகம	காலி 1	வலஸ்முல்ல	ஹங்குரன்கெத்த			மின்னேரிய	மாஹோ		கேகாலை	மொனராகலை மெகா
தெமட்டகொட	மாகொல	ரன்முதுகல	காலி பஸ் வண்டி தரிப்பிட	வீரகெட்டிய	ஹபுகஸ்தலாவ			நொச்சியாகம	மல்லவபிட்டிய		கிரி எல்ல	பஸ்சர
திவுலபிட்டிய	மகுபுற	ரத்மலான 1	ஹபராதுவ	வெலிகம	ஹாரகம			பதவிய	மாரவில		கித்துள் கல	பெலவத்த
தொடங்கொட	மாலபே	ரத்மலான மெகா	ஹக்மன	யட்டியன	ஹதரலியத்த			பங்கஸ் கொடெல்ல	மஸ்பொத		கொலொன்ன	செவனகல
ஏக்கல	மலபல்ல	ராவதாவத்த	அம்பாந்தோட்டை		ஹட்டன்			பொலன்னறுவை 1	மாவதகம		குருவிட்ட	தனமல்வில
என்டேரமுள்ள	மாளிகாவத்த	சல்மல் உயன	ஹபுகள		ஹட்டன் 2			பொலன்னறுவை 2	மெல்சிறிபுர		மாதம்பே	வெலிமட
கம்பஹா 1	மரதகஹமுல்ல	சீதுவ 1	ஹிக்கடுவ		ஹேவாஹெட்ட			ரம்பேவ	நாரம்மல		மாவனல்ல	வெல்லவாய 03
கனேமுல்ல	மத்துகம 2	சீதுவ 2	ஹுங்கம		கடுகண்ணாவை			செவனபிட்டிய	நாத்தாண்டிய		நிவித்திகல	வெல்லவாய 3
கொடகம	மத்தேகொட	செத்சிறிபாய	இமதுவ		கண்டி			தம்புத்தேகம 02	நிகவெரட்டிய		ஓபநாயக	
ஹபரகட	மாவரமண்டிய	சித்தமுள்ள	கலேகன		கட்டுகஸ்தோட்ட மெகா			தலாவ	பன்னல		பபாஹின்ன	
ஹன்வெல்ல	மீகொட	சியம்பலாபே	கம்புருபிட்டிய		கட்டுகஸ்தோட்ட			தம்புத்தேகம	பிதுரு வெல்ல		பல்லே பெத்த	
ஹோகந்தர	மீகொட 2	தளவதுகொட	கராபிட்டிய		கெப்பெட்டிபோல			விலச்சிய	பொல்கஹவெல		பெல்மடுள்ள	
ஹோமாகம	மீபே	உடுவன	கட்டுவன		கொட்டகல			வெலிகந்த	பொல்கஹவெல 2		பெல்மடுள்ள - 02	
ஹோரகஸ்மங்கட	மீரிகம	ஊராபொல 1	கெகனதுர		குண்டசாலை				பொல்பிதி கம		பொத்துபிட்டிய	
ஹொரண 02	மினுவன்கொட	ஊராபொல 2	கொட்டபொல		குருந்துவத்த				பொதுஹெர		ரக்வான	
ஹனுபிட்டிய	மிரிஹான 2	வொக்ஹோல்	குமாரகந்த		மடவல பசார்				புத்தளம்		இரத்தினபுரி 04	
இங்கிரிய	மொறந்துடுவ	வேயன்கொட 2	குருந்து கஹட்ட பீஎம்ஏ		மாரஸ்சன				வனா்ததவி்லலு வா		இரத்தினபுரி 1	
ஜா எல மெகா	மொறட்டுமுள்ள	வாத்துவ	லுணுகம் வெஹெற		மாத்தளை				வாரியபொல		இரத்தினபுரி 2	
ஜா எல	மொறட்டுவை	வக	மாகந்துர		மாத்தளை 2				வெல்லவ		இரத்தினபுரி 3	
கடவத	மவுண்ட் லவீனியா 2	வக 2	மாலிம்பொட		மெனிக்ஹின்ன				யன்தம்பலவ		ருவன்வெல்ல	
கடுவெல	முல்லேரியா	வலான	மாத்தறை மெகா		நாவலபிட்டிய						தல்தூவ	
களுத்துறை 2 (வடக்கு)	முல்லேரியா 2	வத்துபிட்டிவல	மாத்தறை 2		நில்தன்டஹின்ன						துங்கம	
களுத்துறை தெற்கு	நுகட	வெஹெர	மாவடவில		நுவரெலியா						உடவலவ	
கந்தான	நாகொட	வெளிபில்லேவ	மித்தெனிய		பேராதனை						வரகாபொல	
கட்டுவ	நைவள	வெலிசர மெகா	மிரிஸ்வத்த		பிலிமதலாவ						வெளி ஓய	
கட்டுநாயக 1	நாராஹேன்பிட்ட	வெலிவேரிய	மொரவக		பூஜாபிட்டிய						யட்டியன்தொட்ட	
கட்டுநாயக 2	நவகமுவ	வெல்லம்பிட்டிய	நாகொட - காலி		பூண்டலுஓய							
கட்டுவாவல	நீர் கொழும்பு 2	யக்கல	நெலுவ		புஸ்செல்லாவ							
களனிய	நெக்ரிஸ்	யக்கல 2	பிங்கண்டா		ராகல							
கெஸ்பேவ	பாதுக்க		பின்னதுவ		ரத்தொட்ட							
கெஸ்பேவ - 02	பஹத்கம		பிட்டபெத்தர		ரிகில்லகஸ்கட							

06. கூட்டுத்தாபன நிர்வாகம்

சபை உறுப்பினர்கள், சிரேஷ்ட முகாமைத்துவக் குழு மற்றும் அலுவலர் குழாம் ஆகிய சகலரும் இந் நிறுவனத்தினுள் வெளிப்படையானதும் பயனுறுதி வாய்ந்ததுமான கூட்டுரிமை ஆட்சி நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கும் அமுல்படுத்துவதற்கும் அர்ப்பணிப்புச் செய்துள்ளனர் என்ற அதன் தீர்மானத்தில் நிறந்துவைத்த உறுதியாகவிருந்துள்ளது. இக் இந்நிறுவன்மானது அதியுயர் நியமங் கொண்ட கூட்டுரிமை ஆட்சிக்கு அதுவாகவே பொறுப்பினைக் கொண்டுள்ளது. நிலைத்து நிற்கும் மதிப்பு உருவாக்கம் கருதி மாற்றியமைக்கப்படும், பொறுப்பு வாய்ந்த செயற் திறன் நோக்கிய முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாட்டிற்கான அடிப்படையினை கூட்டுரிமை ஆட்சியை முன் வைக்கின்றது. தமது உத்தியோகபூர்வ கடமைகளின் செயற் திறனிலும் நிருவனத்தின் மதிப்பினை பாதிக்கக் கூடிய ஏனைய சூழ் நிலைகளிலும் சிரேஷ்ட முகாமையினாலும் பணிப்பாளர் சபையினாலும் இணங்கியொழுகப்பட்டுள்ள கூட்டுரிமை விழுமியங்களின் வலுவான தொகுதியொன்றின் ஊடாக நிருவனத்தின் சகல மட்டங்களிலும் கூட்டுரிமை ஆட்சி நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ளது. நிருவனமானது அதன் சகல செயற்பாடுகளிலும் நேர்மை, ஒழுக்க விழுமியங்கள் மற்றும் தொழில் வாண்மை என்பவற்றின் அதியுயர் நியமனங்களுக்கு அர்ப்பணிப்புச் செய்கின்றது.

நிறுவனத்தின் அக்கறை தாரர்களுக்காக அதன் நீண்ட கால மதிப்பினை அதிகரிக்கும் பொருட்டு தலைவரின்/ முகாமைத்துவப் பணிப்பாளரின் வழிகாட்டல் மற்றும் சபையின் மேற்பார்வை ஆகியவற்றின் கீழ் நிருவனத்திள் முகாமையாளர்கள், அலுவர்கள் மற்றும் ஊழியர்கள் ஆகியோரினால் அதன் வியாபாரம் நடாத்தப்படுகின்றது. சபையானது நிலைத்து நிற்கக் கூடியதும்இ நம்பிக்கையளிக்கக் கூடியதுமான சகல அக்கறை தாரர்களுக்குமான மதிப்பினை உருவாக்குவதன் மூலம் அதன் பொறுப்புகளை நிறைவேற்றுவதை இலக்காகக் கொண்டுள்ளது. நிருவனத்திள் கூட்டுரிமை வியாபாரத்தை விளங்கிக் கொள்வதற்கு பணிப்பாளர் சபைக்கு நன்கு வசதியளிக்கப்பட்டுள்ளது.

சபையானது மாதாந்தம் கூடுவதுடன் பின்வருவனவற்றின் மீது முழுமையான கவனத்தைச் செலுத்துகின்றது.

- தந்திரோபாய மற்றும் தொழிற்பாட்டுப் பிரச்சினைகளை மீளாய்வு செய்தல்.
- இலாபத்தையும் , தொழிற்படு மூலதனத்தையும் அத்துடன் மாதாந்த முகாமைத்துவக் கணக்குகளையும் மீளாய்வு செய்தல்.
- தலைவர் / முகாமைத்துவப் பணிப்பாளர் ஊடாக சிரேஷ்ட முகாமையாளர்களுக்கான ஆலோசனைகளையும் , வழிகாட்டல்களையும் வழங்குதல்.
- அக்கறை தாரர்களுக்கான உரிய நேர மற்றும் காலக் கிரம அறிக்கைகளை வழங்குதலும் சுற்றிப் பரப்புதலும்.
- பிரதான முதலீடுகளை அனுமதித்தல்.
- இடைக்கால மற்றும் வருடாந்த அறிக்கைகளை அனுமதித்தல்.

நிறுவனத்திற்கும் அக்கறை தாரர்களுக்கும் இடையிலான செயலுக்கு மிக்க ஒத்துழைப்பை ஊக்குவிக்கும் சகல அக்கறைதாரர்களினதும் உரிமைகளை சபை அங்கீகரிக்கின்றது.

07. நிதியியல் அறிக்கைகள்

7.1 நிறுவனத்தின் இயக்குனர்கள் குழுவின் ஆண்டு அறிக்கை

பொது

2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கைகள் மற்றும் கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் மற்றும் 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு கணக்காய்வு நியம சட்டம் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தின் திருத்தம், நிறுவனங்கள் சட்டத்தின் படி, வருடாந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள படி முன்வைப்பதற்கு இயக்குநர்கள் குழு என்பதன் அடிப்படையில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்

நிறுவனத்தின் முன்னணி நடவடிக்கைகள்

2021 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கைகள் மற்றும் கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் மற்றும் 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு கணக்காய்வு நியம சட்டம் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தின் திருத்தம், நிறுவனங்கள் சட்டத்தின் படி, வருடாந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள படி முன்வைப்பதற்கு இயக்குநர்கள் குழு என்பதன் அடிப்படையில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்

நிறுவனத்தின் முன்னணி நடவடிக்கைகள்

நிறுவனத்தின் ஒட்டு மொத்த மற்றும் உண்மையான வெளிப் படைத் தன்மையை பிரதிபலிக்கும் வகையில் நிறுவனத்தின் நிதி நிலை அறிக்கைகளைத் தயாரித்து வழங்குவதில் இயக்குநர்கள் குழு முக்கிய பங்கு வகிக்கிறது. மோசடி அல்லது குறைபாடுள்ள நிதி நிலை அறிக்கைகளை வெளியிடுவதும், நியாயமான உள்ளக கட்டுப்பாடுகளைத் திட்டமிடுவதும், செயல்படுத்துவதும், பராமரிப்பதும், கணக்கியல் கொள்கைகளைத் தேர்ந்தெடுப்பதைப் பின்பற்றுவதும், கணக்குகளை நியாயமான முறையில் மதிப்பிடுவதும் இயக்குநர்களின் முதன்மை பொறுப்புகளில் ஒன்றாகும். நிதி அறிக்கை, இலாப அறிக்கை, பிற விரிவான வருமான அறிக்கை, பங்கு பரிவர்த்தனை அறிக்கை, பணப் புழக்க அறிக்கை போன்ற துறைகளில் முறையான மற்றும் வெளிப்டையான முறையில் ஒரு அறிக்கை வெளியிடப்பட வேண்டும் என்பதே இயக்குநர்கள் குழுவின் திட்டமாகும். 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமனங்கள் மற்றும் இலங்கை அறிக்கையிடல் நியமனங்களின் படி தயாரிக்கப்பட்டது.

நிதி அறிக்கை மற்றும் கணக்காய்வு அறிக்கை

இலங்கையின் பட்டய கணக்காளர் நிறுவனம் வழங்கிய இலங்கை கணக்கியல் கொள்கைகள் மற்றும் நியமனங்களின் அடிப்படையில் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. பிரதி பொது முகாமையாளர் மற்றும் இயக்குநர்கள் கையெழுத்திட்ட நிதி நிலை அறிக்கைகளின் நிதி நிலை அறிக்கைகள் ஆண்டு அறிக்கையின் 25 முதல் 78 வரையான பக்கங்களில் உள்ளன. நிறுவனத்தின் நிதி நிலை மற்றும் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவனத்தின் செயல் திறன் பற்றிய வெளிப்படையான, நியாயமான மற்றும் உண்மையான அறிக்கை வழங்கப்பட்டுள்ளது.

நிதி அறிக்கை மற்றும் கணக்காய்வு அறிக்கை

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 154 (1) வது பிரிவின் படி அங்கீகரிக்கப்பட்ட வெளி கணக்காய்வாளர் கணக்காய்வு முகாமையாளர், இயக்குநர்கள் குழுவின் அறிக்கையின் ஒருங்கிணைந்த பகுதியாக இருக்கும் நிதி நிலை அறிக்கைகள் குறித்த கணக்காய்வு அறிக்கை, ஆண்டு அறிக்கையின் 17 முதல் 27 வரையான பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கணக்கியல் கொள்கைகள்

இந்த நிதி நிலை அறிக்கையைத் தொகுப்பதில் பின்பற்றப்படும் முக்கியமான கணக்கியல் கொள்கைகள் ஆண்டு அறிக்கையின் 34 முதல் 50 வரையான பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ந்து இயங்குதல் தொடர்பான விடயங்கள்

மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் இந் நிறுவனம் ரூபா. 35,424,512/- நிகர இழப்பைச் சந்தித்ததுடன், மொத்த இழப்பு ரூபா. 19,801,830,058/- ஆகவும், நிறுவனத்தின் தற்போதைய சொத்துக்களை விட ரூபா. 6,947,893,304/- பொறுப்பாகவும் உள்ளது. ஆயினும் கூட, அரசாங்கக் திறைசேரியில் தனது கடமைகளை சரியான நேரத்தில் நிறைவேற்ற நிதி விரிவாக்கத்தை செய்துள்ளதாக இயக்குனர்கள் குழு திருப்தி அடைகிறது. அதன் படி, இந்த அறிக்கைகள் நிதிநிலை அறிக்கையை தயாரிப்பதில் இவை பயன்படுத்தப்பட்டுள்ளன.

நன்கொடைகள்

2022 ஆம் ஆண்டில் நிறுவனம் ரூபா. 966,680/- ஐ நன்கொடையாக அளித்துள்ளது.

ஒதுக்கங்கள்

அந்தந்த ஒதுக்கங்களின் பகிர்வு உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றின் 31 ஆம் பக்கத்தில் காட்டப்பட்டுள்ளது.

ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள்

ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் விவரங்கள் ஆண்டு அறிக்கையின் பக்கம் 55 மற்றும் 57 ஆம் பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வெளியீட்டு காலத்திற்குப் பிறகான நிகழ்வுகள்

நிதி நிலை அறிக்கையின் வெளியீட்டு காலத்திற்குப் பிறகு குறிப்பிடத்தக்க நிகழ்வுகள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. இந்த வெளியீடுகளில் மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய விதத்தில் பதிவுகள் இடம் பெறவில்லை.

தொடர்புடைய தரப்பினருடனான பரிவர்த்தனைகள்

இலங்கை கணக்கியல் நியமனம் 24 இன் படி நிதி நிலை அறிக்கைகளைத் தயாரிப்பதில் தொடர்புடைய தரப்பினருடனான வெளிப்பாடுகள் 51 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

நிறுவனத்துடன் ஒப்பந்தங்களில் இணைவது தொடர்பான இயக்குநர்கள் குழுவின் ஆர்வம்

இயக்குனர்கள் குழு கூட்டத்தின் ஆய்வின் படி, நிறுவனத்தின் எந்தப் பகுதியினதும் இயக்குநர்களுக்கு உரிமை இல்லை. ஒப்பந்தங்களின் இயக்குனர்களின் உரிமைகள் மற்றும் தேவைகள் நிதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

கூறப்பட்ட மூலதனம்

2022 டிசம்பர் 31 திகதியன்று நிலவரப் படி நிறுவனத்தின் அறிவிக்கப்பட்ட மூலதனம் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் படி 893.7 மில்லியன் ஆக காணப்பட்டது. அதன் படி, 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்குள் இலங்கை அரசு சார்பாக 97.45% இலங்கை அரசின் சார்பாக திறைசேரி செயலாளருக்கு ஒப்படைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தொட்டுணர முடியாத சொத்துகள் (அருவமான சொத்துகள்)

2022 டிசம்பர் 31 ஆம் திகதி நிலவரப் படி நிறுவனத்தின் அருவமான சொத்துகள் நிதி நிலை அறிக்கையின் பக்கம் 58 இல் பட்டியலிடப்பட்டுள்ளன.

சட்டங்கள் மற்றும் ஒழுங்கு முறைகளுடன் இணங்குதல்

நிதியாண்டில் நிறுவனம் பொருந்தக் கூடிய அனைத்து சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதி முறைகளுக்கும் இணங்க செயற்பட்டுள்ளது என சுயாதீன கணக்காய்வாளர் அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இணக்கத் துறை நிறுவனத்தின் இணக்கச் செயற்பாடுகளைக் கண்காணித்து, கணக்காய்வு மற்றும் இணக்கக் குழுவுக்கு அறிக்கையிடுகின்றது.

அங்கீகரிக்கப்பட்ட நிதி அறிக்கை

கணக்காய்வு செய்யப்பட்ட நிதி நிலை அறிக்கைக்கு இயக்குனர்கள் குழுவினால் 2023 ஒக்டோபர் 25 ஆம் திகதி அன்று அனுமதி வழங்கப்பட்டது.

அறிக்கை வழங்கப்பட்ட திகதிக்கான இயக்குநர்கள் குழு பின்வருமாறு.

01. ஆர்.எம்.டி.கே.ஜி.என். பண்டார ரணதுங்க - ஆண்டில் ராஜினாமா செய்தார்
02. பி.எச்.ஏ.எஸ். விஜயரத்ன - ஆண்டில் ராஜினாமா செய்தார்
03. என்.ஏ. விமலரத்ன
04. கே.பி.டி. பிரபாத் சிறிசேனா
05. டி. ஜீவநாதன்
06. ரியர் அட்மிரல் பி. ஆனந்த ஜெயலால் குருகுல பீரிஸ் - ஆண்டில் ராஜினாமா செய்தார்
07. வேணுர குணவர்தன - ஆண்டில் ராஜினாமா செய்தார்
08. Prof.ஹரேந்திர காரியவசம்
09. ரஞ்சித் ஜி ஷரூபசிங்க - ஆண்டில் ராஜினாமா செய்தார்
10. காமணி என்.லியனாராச்சி
11. துஷார சஞ்சீவ திஸாநாயக்க
12. ஜே.டி.கொட்டின்கடுவ
13. பி.ஆர்.கே.சேனாநாயக்க
14. விஜித சபாநாத் விஜேமான்ன
15. கீர்த்தி கமகே
16. பசந்த யாப்பா அபேவர்தன
17. டி.எஸ்.பிரியங்கா திஸாநாயக்க
18. நியூட்டன் குமாரசிறி ஜயவர்தன
19. வசந்த பொல்வத்தகே

இயக்குனர்கள் குழுவிற்கு உள்ளடக்கங்கள் தொடர்பான அறிவிப்பு

2007 ஆம் ஆண்டு இல 07 கம்பனிச் சட்டத்தின் பிரிவு 168 (1) (K) இன் படி இயக்குனர்கள் குழு இந்த ஆண்டு அறிக்கையின் உள்ளடக்கங்களை ஏற்றுக் கொண்டது.

சபைக்காகவும் சபை சார்பிலும் ஒப்பமிடப்பட்டுள்ளது (திகதி)

Company Secretary
Lanka Sathosa Limited

7.2 பிரதி பொது முகாமையாளர் - பொறுப்புகள் சார்ந்த நிதிக் கூற்று

2022 டிசம்பர் 31 ஆம் திகதி நிலவரப் படி லங்கா சதொச லிமிடட் இன் நிதி அறிக்கை தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

i. இலங்கை நிதி அறிக்கை தர நிலைகளின் படி (SLFRS/LKASs), ICASL மூலம் வழங்கப்பட்டுள்ளது.

ii. 2007 இன் இலக்கம் 7 கம்பனிகள் சட்டத்தின் படி

இலங்கை கணக்கியல் நியமனங்களின் வெளிப்படுத்தல் தேவைகளுக்கு ஏற்ப நிதி விதி முறைகளை வகுப்பதில் உள்ள பயன்கள் மற்றும் அதன் வெளிப்பாடுகள் தொடர்புடைய விதி முறைகளுக்கு பரிந்துரைக்கப்பட்ட மாதிரிகளுக்கு ஏற்ப தொகுக்கப்பட்டுள்ளன.

எங்கள் அறிவைப் பொறுத்த வரை, நிறுவனத்தின் நிதி நிலை அறிக்கை, கணக்கியல் கொள்கைகள், பிற நிதித் தகவல்கள், இயக்க முடிவுகள் மற்றும்காசுப் பாய்வு ஆகியவை நியாயப்படுத்தப்படுகின்றன, இது மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் அதன் செயற்பாடுகளைத் தொடர நிறுவனம் அதன் பங்குதாரர்களிடமிருந்து (திறைசேரி) ஆதரவைப் பெறுவதை உறுதி செய்கிறது.

நிதி நிலை அறிக்கைகள் முறையான முகாமைத்துவத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது உறுதி செய்வது இயக்குனர்கள் குழுவின் பொறுப்பாகும். நிதி பொது மேலாளர் என்ற வகையில், போதுமான கணக்கியல் கொள்கைகள், முறையான நடைமுறைகள் மற்றும் நிதி அறிக்கையிடலில் உள்ளகக் கட்டுப்பாடுகள் ஆகியவற்றை முறையாக நிறுவுவதற்கும் பராமரிப்பதற்கும் எனக்கு பொறுப்பும் பொறுப்புணர்வும் இருப்பதாகக் கூற விரும்புகிறேன். உள் நிர்வாக கட்டமைப்பை ஒரு நியாயமான மற்றும் முறையான செயல்முறைக்குள்ளான நிதிநிலை அறிக்கையாக தீர்மானிக்க முடியும் என்று முகாமைத்துவம் நம்புகிறது.

மேலும், முழுச் செயல்முறையிலும் உள்ளக சொத்துக்கள் ஒரு நியாயமான அடிப்படையில் பராமரிக்கப்பட்டு வருவதாகவும், அந்த சொத்துக்கள் அனைத்தும் நியாயமான கணக்கீடுகளுக்கு ஏற்ப பராமரிக்கப்பட்டு பாதுகாக்கப்படுகின்றன என்பதையும் சுட்டிக் காட்டலாம்.

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 154 (1) வது பிரிவின் படி பங்குதாரர்கள் சார்பாக நிதி அறிக்கைகளை கணக்காய்வாளர் கணக்காய்வு செய்துள்ளார். சுயாதீன கணக்காய்வாளருக்கு இலவச அணுகல் வழங்கப்பட்டுள்ளதுடன் சந்திப்பு அதிகாரங்கள் முகாமைத்துவ குழுஅல்லது இல்லாமல் வழங்கப்படுகின்றன.

i. நிறுவனத்தின் அறிவின் படி, இது உண்மையான மற்றும் சரியான விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகள் மற்றும் வழிகாட்டுதல்களுக்கு உட்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது.

ii. நிதி நிலை அறிக்கைகளில் உள்ள குறிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள படி கணக்காய்வு அதிகாரிக்கு பதிலாக வேறு ஒருவருடைய இணக்கமும் செய்யப்படவில்லை.

பிரதி பொது முகாமையாளர் - நிதி

7.3 தன்னாதிக்க கணக்காய்வாளரின் அறிக்கை

TAC/D/LSL/FA/22/25

தலைவர்
லங்கா சதொச லிமிடட்

லங்கா சதொச லிமிட்டட் நிறுவனத்தின் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் பிற சட்ட ரீதியான மற்றும் கண்காணிப்புத் தேவைகள் தொடர்பில் 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 ஆவது பிரிவின் பிரகாரமான கணக்காய்வு அறிக்கை

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 மறுப்பு அபிப்பிராயம்

லங்கா சதொச லிமிட்டட் கம்பனியின் 2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் சுருக்கமயமாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளை உள்ளடக்கிய 2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154 (6) ஆவது சட்டத்தின் பிரகாரம், எனது அறிக்கை எதிர்வரும் காலப் பகுதியில் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும், பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க தாபனத்தின் நிதிக் கூற்றுக்கள் மீதி அபிப்பிராயம் ஒன்றை நான் தெரிவிக்கவில்லை.

1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) கலந்தாலோசிப்பு வருட இறுதியில் கம்பனியின் குறைப்படு ரூபா 35,424,512 ஆகக் காணப்பட்டதுடன், நடைமுறை சொத்துக்கள் ரூபா 10,832,852,647 மற்றும் நடைமுறை பொறுப்புகள் ரூபா 17,780,745,951 ஆகக் காணப்பட்டமையால் நடைமுறை சொத்துக்களைத் தாண்டிய நடைமுறை பொறுப்புகள் ரூபா 6,947,893,304 ஆகக் காணப்பட்டது. மேலும், மொத்த சொத்துக்கள் ரூபா 12,175,345,725 மற்றும் மொத்த பொறுப்புகள் ரூபா 24,785,185,491 ஆகக் காணப்பட்டமையால் மொத்த சொத்துக்களைத் தாண்டிய மொத்த பொறுப்புகள் ரூபா 12,609,839,766 ஆகக் காணப்பட்டது. இதனால், கம்பனிக்குத் தனது சொத்துக்களின் மூலம் பொறுப்புகளுக்கு முகங் கொடுக்கக் கூடிய திறன் மற்றும் தொடர்ச்சியான முன்னெடுப்புத் திறன் ஆகியன திறைசேரியின் நிதிக் கையளிப்பின்றி தழும்பல் நிலையில் காணப்படுகின்றது. மேலும் கம்பனி சட்டத்தின் 220 ஆவது பிரிவின் பிரகாரம். பணிப்பாளர் சபையினால் நடப்பு நிலைமை தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு கம்பனியின் நிலைப்பேறு தன்மையை பாதுகாக்கும் பொருட்டு தேவையான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருப்பதாக அவதானிக்கப்படவில்லை.

(ஆ) 2019 ஜூன் 25 ஆம் திகதிய இலக்கம் 19/1659/107/147 ஐ உடைய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், கம்பனியினால் அரிசியை இறக்குமதி செய்யும் பொருட்டு பெறப்பட்டுள்ள கடன் பணத் தொகையில் மூலதன பெறுமதியை தீர்க்கும் பொருட்டு 2020 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக 05 வருட காலப் பகுதிக்கு திறைசேரியினால் அரசுக்கு உரித்தான தொழில் முனைவுகளின் பங்கு முதலீடாக, நிதியங்களை வழங்க வேண்டியிருப்பதாக அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அதனடிப்படையில், 2020 ஆம் ஆண்டிலிருந்து கலந்தாலோசிப்பு ஆண்டு காலப் பகுதி வரை 03 வருடங்களுடன் தொடர்புடையதாகத் தீர்க்கப்பட்ட கடன் தொகையின் ஒட்டு மொத்த பெறுமதியான ரூபா 5,739,364,265 ஆன தொகைக்கு கலந்தாலோசிப்பு வருட இறுதியிலும் பங்குக் கையளிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை கணக்கீட்டுத் தராதரம் 01 இன் 32 ஆவதி பந்தியின் பிரகாரம், சொத்துக்கள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவுகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருக்க வேண்டியிருப்பினும், கம்பனியினால் கிடைக வேண்டிய மீதிகளில் ரூபா 75,385,840 ஆன பெறுமதியான கடன் மீதியும், செலுத்த வேண்டிய மீதிகளில் ரூபா 1,728,194 ஆன பெறுமதியான வரவு மீதியும் ஒன்றுக்கொன்று தீர்க்கப்பட்டு அறிவிக்கப்பட்டமையால் நிதிக் கூற்றுக்களில் கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள் அப் பெறுமதிகளில் குறைவாகக் கணிப்பிடப்பட்டிருந்தது.

(ஈ) இலங்கை கணக்கீட்டுத் தராதரம் 01 இன் 38 ஆவது பந்தியின் பிரகாரம், தரத்தினால் இடமளிக்கையில் அல்லது பிற வகையாகத் தேவையான பட்சத்தைத் தவிர்த்து, கம்பனியினால் முன்னைய காலப் பகுதி தொடர்பாக ஒப்பீட்டு ரீதியாக தகவல்களை முன் வைத்தல் வேண்டும். எனினும், கம்பனியினால் 2021 ஆம் ஆண்டு காலப் பகுதிக்கான நிதிக் கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் 5 இன் கீழ் கையிருப்பு அழிவுகள் தொடர்பான தகவல்கள் முன் வைக்கப்பட்டிருப்பினும், கலந்தாலோசிப்பு வருட கால கட்டத்தில் அதற்கு நிகராகையிருப்பு அழிவுகள் தொடர்பான தகவல்கள் நிதிக் கூற்றுக்களில் முன் வைக்கப்படாதிருந்தமையால் நிதிக் கூற்றுக்களின் நிலைத் தன்மை தொடர்பாக பிரச்சினைகள் மேலெழுந்தன. மேலும், இலங்கை கணக்கீட்டுத் தராதர இலக்கம் 02 இன் 34 ஆவது பந்தியின் பிரகாரம், கையிருப்பு தொடர்பாக காலப் பகுதிக்குரிய அனைத்து அழிவுகளையும் செலவாக அடையாளம் காண வேண்டியிருப்பினும், முன்னைய ஆண்டு காலப் பகுதிகளில் தொடர்ச்சியான செலவாக கையிருப்புத் தட்டுப்பாடு அடையாளம் காணப்பட்டிருப்பினும், கலந்தாலோசிப்பு வருட காலப் பகுதியில் கையிருப்பு கணக்கெடுப்பின் கீழ் அடையாளம் கண்டுள்ள ரூபா 342,327,235 ஆன கையிருப்புத் தட்டுப்பாடு, நிதி நிலைமைக் கூற்றில் பிறகிடைக்க வேண்டியவை எனும்வகுதியின் கீழ் குறித்துக் காட்டப்பட்டிருக்கவில்லை. முன்னைய ஆண்டுக்கு நிகராக கலந்தாலோசிப்பு வருட கால கட்டத்தில் நட்டம் குறைவடைவதற்கு இக் கையிருப்பு அழிவுப் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் செலவாக அடையாளம் காணப்படாமை எனும் விடயம் பெருமளவில் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்ததுடன், இதனால் வரிக்கு முந்திய நட்டம் அப் பெறுமதியின் கீழ் குறைவடைந்துள்ளது.

(உ) இலங்கை கணக்கீட்டுத் தராதர இலக்கம் 07 இன் பிரகாரம் நிதியோட்டக் கூற்றைத் தயாரிக்கையில் முன்னைய காலப் பகுதிகளின் பிழைகளை சரி செய்தல் இலாபத்துக்கு ஒப்பீடு செய்யாதிருக்க வேண்டியிருப்பினும், ரூபா 13,513,020 ஆன முன்னைய காலப் பகுதிகளின் பிழைகளின் சரி செய்கை இலாபத்துக்கு ஒன்று சேர்த்து குறித்துக் காட்டப்பட்டிருந்தது. மேலும் கலந்தாலோசிப்பு வருட காலப் பகுதிக்கு குத்தகை வரிச் சொத்துக்களுக்கென செலுத்தப்பட்ட தவணை பெறுமதி ரூபா 21,459,517 ஆகக் காணப்பட்டாலும், அதனை நிதியோட்டக் கூற்றுக்களில் ரூபா 34,972,537 ஆக குறித்துக் காட்டப்பட்டிருப்பதால், ரூபா 13,513,020 ஆன மாற்றம் காணப்பட்டது.

(ஊ) இலங்கை கணக்கீட்டுத் தராதரம் 08 இன் 42 ஆவது பந்தியின் பிரகாரம், போதியளவான முன்னைய காலப் பகுதி பிழையாக காலத்துக்கு முந்திய கலந்தாலோசிப்பு வருடத்தின் நிதிக் கூற்றுக்களில் சரி செய்ய வேண்டியுள்ளது. எனினும்,

(i) 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 27,660,154 பெறுமதியான மின் தோற்றுவாய் இயந்திரங்கள் அவ் வருட கால கட்டத்தில் கணக்குகளில் காட்டப்படாது கலந்தாலோசிப்பு ஆண்டில் கணக்குகளில் குறித்துக் காட்டப்பட்டிருந்ததுடன், 2018 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரை அச் சொத்துக்களுடன் தொடர்புடைய தேய்மானப் பெறுமதியான ரூபா 14,755,413 கணக்குகளில் குறித்துக் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ii) 2021 ஆம் ஆண்டில் Gondola வருமானமாக அதிகரித்துக் காட்டப்பட்டிருந்த ரூபா 7,475,223 ஆன தொகை உரிமை மாற்றக் கூற்றில் ஒப்பீடு செய்வதற்குப் பதிலாக நிதிக் கூற்றுக்களில் பிற வருமானங்களிலிருந்து குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ii) கம்பனியினால் முன்னைய ஆண்டுகளின் கையிருப்பு அழிவுகள் தொடர்பாக கலந்தாலோசிப்பு ஆண்டில் அறவிடப்பட்ட ரூபா 4,747,174 பெறுமதியான உரிமை மாற்றக் கூற்றில் ஒப்பீடு செய்வதற்குப் பதிலாக நிதிக் கூற்றுக்களில் பிற வருமானங்களின் கீழ் குறித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) இலங்கை கணக்கீட்டுத் தராதரம் 16 இன் 51 ஆவது பந்தியின் பிரகாரம், சொத்தொன்றின் மீதி மதிப்பு (Residual Value) மற்றும் அதன் வினைத் திறன் மிக்க வாழ்தகவு குறைந்தளவில் ஒவ்வொரு நிதி ஆண்டின் இறுதியிலும் பகுப்பாய்வுக்கு உட்படுத்த வேண்டியிருப்பினும், எதிர்ப்பார் நிலைப்பாடுகள் மேற்குறித்த விலை மதிப்பீடுகளிலிருந்து மாற்றமடையுமாயின் அம் மாற்றங்களை கணக்கீட்டு விலை மதிப்பீட்டில் மாற்றங்களாக இலங்கை கணக்கீட்டுத் தராதர இலக்கம் 08 இன் பிரகாரம், விலை மதிப்பிடப்பட்ட குறைப்பாடுகளை சரி செய்த வண்ணம் சரியான தாங்குப் பெறுமதி நிதிக் கூற்றுக்களின் ஊடாக முன் வைக்க வேண்டியிருப்பினும், கலந்தாலோசிப்பு வருடத்தின் ஆரம்பத்தில் நிலவிய முற்று முழுதாகத் தேய்மானமடைந்துள்ள, எனினும் மேலும் பயன்படுத்துகின்ற கூட்டுத் தொகை ரூபா 630,979,043 ஆன 07 சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் வினைத் திறன் மிக்க வாழ்தகவு 2019 ஆம் ஆண்டின் பிற்பாடு கலந்தாலோசிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) இலங்கை கணக்கீட்டுத் தராதரம் 36 இன் 09 ஆவது பந்தியின் பிரகாரம், அழிவடையக் கூடிய நட்டங்கள் தொடர்பாக வருடாந்த அழிவு விலை மதிப்பீட்டை முன்னெடுக்க வேண்டியிருப்பினும், கலந்தாலோசிப்பு வருட காலப் பகுதி வரை முழு மொத்தமாக ரூபா 618,991,224 ஆன அழிவடையக் கூடிய நட்டங்கள் தொடர்பாக அத்தகைய அழிவடையக் கூடிய விலை மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஒ) நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் கம்பனியுடன் தொடர்புடைய தரப்பினரான கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனத்திலிருந்து அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 10,083,353 ஆகக் காணப்பட்டாலும், கூட்டுறவு மொத்த வர்த்தகக் கூட்டுத்தாபனத்தின் புத்தகங்களின் பிரகாரம் அம் மீதி ரூபா 89,228,613 ஆகக் காணப்பட்டமையால் ரூபா 79,145,260 ஆன மாற்றம் அவதானிக்கப்பட்டது.

(ஒ) தொடர்புடைய தரப்பு நிறுவனங்களினால் செலுத்த வேண்டிய பெறுமதி ரூபா 1,736,524,122 ஆகக் காணப்பட்டதுடன், அப் பெறுமதியில் ரூபா 1,688,336,236 ஆன தொகை, அதாவது நூற்றுக்கு 97 பங்கு கூட்டுறவு மொத்த வர்த்தகக் கூட்டுத்தாபனத்துக்கு செலுத்த வேண்டிய மீதியாகவும் காணப்பட்டது. கூட்டுறவு மொத்த வர்த்தகக் கூட்டுத்தாபனத்தின் புத்தகங்களின் பிரகாரம், கம்பனியினால் கிடைக்க வேண்டிய பெறுமதி ரூபா 2,151,533,977 ஆகக் காணப்பட்டமையால் ரூபா 463,197,741 ஆன மாற்றம் அவதானிக்கப்பட்டது.

(ஔ) 2015 ஆம் ஆண்டிலிருந்து காணப்படுகின்ற வாடகை முற்பணக் கணக்கில் நிலவிய ரூபா 3,498,678 ஆன அடையாளம் காணப்படாத மீதியை ஒப்பீடு செய்து சரி செய்வதற்கு கலந்தாலோசிப்பு வருட காலப் பகுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(க) கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனத்திலிருந்து கையகப்படுத்தப்பட்ட ரூபா 18,821,440 ஆன மோட்டார் வாகனங்கள், ரூபா 3,642,843 ஆன தொடர்பாடல் உபகரணங்கள் மற்றும் ரூபா 22,798,843 ஆன ஏனைய சொத்துக்களை நிலையான சொத்துக்கள் ஆவணத்தில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன், அதனுடன் தொடர்புடைய உப ஆவணங்களும் கணக்காய்வுக்கென முன் வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ங) நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் மீதி மற்றும் நிலையான சொத்து ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மீதிகளுக்கிடையே ரூபா 791,293,907 ஆன மாற்றம் காணப்பட்டது. இம் மாற்றத்துக்கு மத்தியில் 2023 ஆம் ஆண்டு காலப் பகுதியிலிருந்து காணப்படுகின்ற மாற்றம் ரூபா 398,243,078 ஆகக் காணப்பட்டது.

(ச) சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் 6 பகுதிகளுடன் தொடர்புடையதாக கலந்தாலோசிப்பு வருட காலப் பகுதிக்கு நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள தேய்மானச் செலவு மற்றும் கணக்காய்வின் பிரகாரம் கணிப்பிடப்பட்ட தேய்மானச் செலவிடையே ரூபா 67,188,313 ஆன மாற்றம் காணப்பட்டது.

(ஞ) நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், வர்த்தக பகுதியின் கீழ் செலுத்த வேண்டியவற்றின் மீதி ரூபா 10,651,299,359 ஆகக் காணப்பட்டதுடன், உப ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மீதி ரூபா 10,802,541,289 ஆனமையால் ரூபா 151,241,930 ஆன மாற்றம் அவதானிக்கப்பட்டது.

(ட) நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், வர்த்தக வகுதியின் கீழ் ரூபா 273,398,387 ஆன தொகை குறிப்பிடப்பட்டிருப்பதுடன், கணக்காய்வு தொடர்பாக முன் வைக்கப்பட்ட உப ஆவணத்தின் பிரகாரம் ரூபா 256,691,516 ஆகக் காணப்பட்டமையால் ரூபா 16,706,871 ஆன மாற்றம் அவதானிக்கப்பட்டது.

(ண) 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிலவிய ரூபா 78,546,486 ஆன நுகர்வுப் பண்டக் கையிருப்பு தொடர்பாக பௌதீக ரீதியாக உண்மைப்படுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருக்காமையால் கையிருப்பின் இருப்பு தொடர்பாக உண்மைப்படுத்தலை பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது.

(த) கலந்தாலோசிப்பு வருட கால கட்டத்தில் Manual Outlet செயற்படாதிருந்ததுடன், 2021 ஆம் ஆண்டில் Manual Outlet தொடர்பாக முன்னெடுக்க வேண்டிய ஒப்பீடுகள் 2022 ஆம் ஆண்டு கால கட்டத்தில் Manual Outlet விற்பனை செலவுக் கணக்கின் ஊடாக முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை. இதனால், விற்பனை செலவு ரூபா 915,763,857 இனால் அதிகளவில் கணிப்பிடப்பட்டிருந்தது.

(ந) கம்பனியினால் சொத்துக்களுக்கு ஏற்பட்டுள்ள அழிவுகளை காப்புறுதி நட்ட ஈடு பெறப்படுவதுடன் ஒப்பீடு செய்யாது காப்புறுதி கம்பனியிலிருந்து கிடைக்கப் பெற்ற நட்ட ஈட்டுத் தொகையான ரூபா 1,082,405 மாத்திரம் நிதிக் கூற்றுக்களில் பிற வருமானங்களின் கீழ் குறித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ப) கம்பனியின் தலைமை அலுவலகத்துக்கென கலந்தாலோசிப்பு வருட கால கட்டத்தில் கொள்வனவு செய்யப்பட்ட மின் தோற்றுவாய் இயந்திரங்களுக்கு செலுத்தப்பட்ட ரூபா 5,162,373 ஆன மூலதன செலவு, கடன்படு செலவாக நிதிக் கூற்றுக்களில் குறித்துக் காட்டப்பட்டிருப்பதால், நிதிக் கூற்றுக்களில் சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மற்றும் இலாபம் ஆகியன அப் பெறுமதியின் கீழ் குறைவாகக் கணிப்பிடப்பட்டிருப்பதுடன், தேய்மான செலவு மற்றும் தேய்மான ஒதுக்கீட்டுப் பெறுமதி ரூபா 774,356 பெறுமானத்தினால் குறைவாகக் கணிப்பிடப்பட்டிருந்தது.

(ம) ரூபா 4,978,210,221 ஆன பெறுமதியையுடைய 12 கணக்கு மீதிகளின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்தும் பொருட்டு எழுத்து மூலமான சாட்சியங்கள் கணக்காய்வுக்கு முன் வைக்கப்பட்டிருக்கவில்லை.

மேலே விபரிக்கப்பட்டுள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றில், விபரமான வருமானக் கூற்றில், உரிமை மாற்றக் கூற்றில் அல்லது நிதியோட்டக் கூற்றில் உள்ளடங்குகின்ற அளவியல் ரீதியான பகுதிகளை மாற்றீட்டு உத்திகளின் ஊடாக உறுதிப்படுத்துவதற்கு அல்லது உண்மைப்படுத்துவதற்கு என்னால் முடியாதுள்ளது. இதனால், நிதி நிலைமைக் கூற்று, விபரமான வருமானம் கூற்று, உரிமை மாற்றக் கூற்று மற்றும் நிதியோட்டக் கூற்று ஆகியவற்றில் குறிக்கப்படுகின்ற பெறுமதிகள் அல்லது வகுதிகளில் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத பெறுமதிகள் அல்லது கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக ஏதாவதொரு ஒப்பீட்டை மேற்கொள்ள வேண்டியுள்ளதா எனும் விடயம் தொடர்பாக குறிப்பாக சுட்டிக் காட்ட முடியாதிருந்தது.

1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும், அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக் கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும், நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையானபிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக் கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக் கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடை நிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன் முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்கம் தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் கால ரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாகப் பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக் கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

இலங்கை கணக்காய்வு தராதரங்களின் பிரகாரம் நடாத்தப்படுகின்ற கணக்காய்வின் அடிப்படையிலமைந்த வண்ணம் கம்பனியின் நிதிக் கூற்று தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வெளியிடுதல் எனது பொறுப்பாகக் காணப்படுகின்றது. எவ்வாறாயினும், மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்கள் காரணமாக இந் நிதிக் கூற்று தொடர்பான கணக்காய்வு கருத்துக்கான அபிப்பிராயத்தை வழங்குவதற்குப் போதியளவான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சாட்சியங்களை பெற்றுக் கொள்வதற்கு எனக்கு முடியாதிருந்தது.

2. இலங்கை கணக்காய்வு தராதரங்களின் பிரகாரம் நடாத்தப்படுகின்ற கணக்காய்வின் அடிப்படையிலமைந்த கம்பனியின் நிதிக் கூற்று தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வெளியிடுதல் எனது பொறுப்பாகக் காணப்படுகின்றது. எவ்வாறாயினும், மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்கள் காரணமாக இந் நிதிக் கூற்று தொடர்பான கணக்காய்வு கருத்துக்கான அபிப்பிராயத்தை வழங்குவதற்குப் போதியளவான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சாட்சியங்களை பெற்றுக் கொள்வதற்கு எனக்கு முடியாதிருந்தது.

2.1 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 2007 இன் இலக்கம் 7 ஐ உடைய கம்பனிகள் சட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

2.1.1 2007 இன் இலக்கம் 7 ஐ உடைய கம்பனிகள் சட்டத்தின் 163 (2) பிரிவினதும், 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (அ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரமும், கணக்காய்வுக்கு அவசியமானதென கருதப்படுகின்ற அனைத்துத் தகவல்களும், விளக்கங்களும் என்னால் பெறப்படாதிருந்ததுடன், தேவையான கணக்கு அறிக்கைகள் கம்பனியின் வசம் காணப்படுகின்றதா எனும் விடயத்தை என்னால் தீர்மானிக்க முடியாதிருந்தது.

2.1.2 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் பொருந்தக் கூடியவையாகவுள்ளன.

2.1.3 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (ஈ) (iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையின் பிரகாரம், எனது அறிக்கையின் மறுப்பு அபிப்பிராயம் பிரிவில் (அ), (ஊ), (ஐ), (ஒ), (ஔ), (ங) மற்றும் (ச) இல் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகளைத் தவிர கடந்த வருடம் என்னால் முன் வைக்கப்பட்ட சிபாரிசுகளின் ஊடாக முன் வைக்கப்பட்ட பிரேரணைகள் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட செயன் முறைகள் மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட சாட்சியங்களின் பிரகாரம் மற்றும் போதியளவான விடயங்களுக்கு வரையறுக்கப்பட்டமையால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கூற்றுக்களை முன் வைப்பதற்குப் போதியளவான விடயங்கள் எனது கண்காணிப்பிற்கு உள்ளாகவில்லை.

2.2.1 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் கம்பனியின் நிர்வாக சபையின் ஏதாவதொரு அங்கத்தவருக்கு கம்பனியுடன் தொடர்புபட்டு ஏதாவதொரு ஒப்பந்தம் தொடர்பில் நேரடியாக அல்லது எந்தவொரு பிற அடிப்படையிலும் சாதாரண வர்த்தக நிலைகளுக்குப் புறம்பாக தொடர்புபட்டிருப்பதாக.

2.2.2 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகளைத் தவிர ஏதாவதொரு தொடர்புடைய எழுத்து மூலமான சட்டத்திற்கு அல்லது கம்பனியின் நிர்வாக சபையினால் வெளியிடப்பட்ட பிரிதொரு பொது அல்லது விசேட ஏற்பாடுகளின் பிரகாரத்துக்கு ஏற்புடையதாகாத வகையில் செயற்பட்டிருப்பதாக.

சட்டங்கள் / வழிகாட்டல்கள் தொடர்பான குறிப்புகள்	அவதானிப்புகள்
(அ) 2022 இன் இலக்கம் 25 ஐ உடைய சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு சட்டத்தின் 17 ஆவது பிரிவு	சமூக பாதுகாப்பு பங்களிப்பு பணத் தொகையை அடுத்த மாதம் 20 ஆம் திகதிக்கு முன்பு உள் நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்க வேண்டியிருப்பினும், 2022 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டுடன் தொடர்புடைய சமூகப் பாதுகாப்பு பங்களிப்புத் தொகையான ரூபா 83,261,488 ஆன தொகையில் ரூபா 37,977,368 ஆன தொகை 10 மாத கால தாமதத்துடன் வைப்பிலிடப்பட்டிருந்ததுடன், எஞ்சிய பணத் தொகையான ரூபா 45,284,120 ஆன பணத் தொகை 2024 ஜனவரி 16 ஆம் திகதியளவிலும் வைப்பிலிடப்பட்டிருக்கவில்லை.
(ஆ) 2021 நவம்பர் 16 ஆம் திகதிய இலக்கம் 01/2021 ஐ உடைய அரச வணிக சுற்றறிக்கையின் பிரகாரமான செயலாற்றுகை கை நூல்	
(i) 6.1 ஆவது பந்தி	கம்பனியில் சீரான நிதி முகாமைத்துவத் தொகுதியொன்று செயற்பட வேண்டியிருப்பினும், கம்பனியினால் மக்கள் வங்கியில் பராமரிக்கப்படுகின்ற 04 கணக்குகள் மிகைப் பற்று நிலையை அடைந்திருந்ததுடன், கலந்தாலோசிப்பு வருட கால கட்டத்தில் வங்கி மிகைப் பற்று மீதிகளின் மொத்தம் ரூபா 5,050,282,232ஆகக் காணப்பட்டதுடன், முன்னைய ஆண்டுக்கு நிகராக ரூபா 1,868,683,577 இனால், அதாவது நூற்றுக்கு 37% இனால் அதிகரித்திருந்தது. கலந்தாலோசிப்பு வருட கால கட்டத்தின் வங்கி மிகைப் பற்று தொடர்பாக செலுத்தப்பட்ட வட்டி ரூபா 829,787,908 ஆகக் காணப்பட்டதுடன், அது முன்னைய ஆண்டுக்கு நிகராக ரூபா 607,589,920 ஆன, அதாவது நூற்றுக்கு 273% இனால் அதிகரித்திருந்தது.
(ii) 6.6 ஆவது பந்தி	நிதி வருடம் நிறைவடைந்து 60 நாட்களினுள் வரைவு வருடாந்த அறிக்கை மற்றும் நிதிக் கூற்றுக்களை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முன் வைக்க வேண்டியிருப்பினும், 2023 நவம்பர் 02 ஆம் திகதி, 245 நாட்கள் தாமதமடைந்த காலப் பகுதியுடைய நிதிக் கூற்றுக்கள் மாத்திரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முன் வைக்கப்பட்டிருந்தது.

(இ)

2015 மே 25 ஆம் திகதிய இலக்கம் 1/2015 ஐ உடைய அரச வணிக சுற்றறிக்கை

கம்பனியினால் திறைசேரி அனுமதியின்றி கலந்தாலோசிப்பு வருட கால கட்டத்தில் உத்தியோகபூர்வ வாகனப் பயன்பாட்டுக்கு உரிமமற்ற உத்தியோகத்தர்களுக்கு மாதாந்தம் ரூபா 12,500 எனும் அடிப்படையில் 11 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 1,487,500 ஆன போக்குவரத்துக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ)

2017 மே 16 ஆம் திகதிய இலக்கம் DMS/1741 ஐ உடைய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம்

பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் மற்றும் பிரதிப் பொது முகாமையாளருக்கு செலுத்த வேண்டிய மாதாந்தக் கொடுப்பனவு முறையே ரூபா 95,000 மற்றும் ரூபா 90,000 ஆக அனுமதிக்கப்பட்டிருப்பினும், பணிப்பாளர் சபையின் அனுமதியின் பிரகாரம் பிரதான நிறைவேற்று அதிகாரிக்கு ரூபா 250,000 ஆன மாதாந்தக் கொடுப்பனவும், பணிப்பாளர் சபையின் அனுமதியின்றி பிரதிப் பொது முகாமையாளர் பதவிக்கு ரூபா 150,000 ஆன மாதாந்தக் கொடுப்பனவும் செலுத்தப்பட்டிருந்தது. அதனடிப்படையில், கலந்தாலோசிப்பு வருட கால கட்டத்தில் பிரதான நிறைவேற்று அதிகாரிக்கு ரூபா 846,666 மற்றும் 8 பிரதிப் பொது முகாமையாளர்களுக்கு ரூபா 3,155,000 ஆன பணத் தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

2.2.3 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய கணக்காய்வு சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் கம்பனியின் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் பணிகளுக்கு இசைவாகாத வகையில் செயற்பட்டிருப்பதாக,

2.2.4 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் கம்பனியின் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் பணிகளுக்கு இசைவாகாத வகையில் செயற்பட்டிருப்பதாக, காலப் பகுதியில் தொடர்புடைய சட்ட திட்டங்களுக்கு இசைவாகப் பெருகை அடிப்படையில் பெறப்பட்டு பயன்படுத்தப்படவில்லையென.

(அ) தம்புல்லை விற்பனை நிலையம் தொடர்பாக வளிப் பதனாக்கி இயந்திரங்களை கொள்வனவு செய்வதுடன் தொடர்புடைய பெறுகை நடவடிக்கைகள் ரூபா 2,424,950 ஆன பணத் தொகைக்கு தனியார் நிறுவனமொன்றுக்கு கையளிக்கப்பட்டிருப்பதுடன், பெறுகை வழிகாட்டல் குறிப்பின் 5.4.4 (i) ஆவது பந்திக்கு முரணாக முற்பணப் பாதுகாப்பு முன் வைக்கப்படாது நூற்றுக்கு 75 அதாவது ரூபா 1,818,707 ஆன தொகை முற்பணமாக செலுத்தப்பட்டிருந்தது. விலை மனு நிபந்தனைகளின் N க்கு அமைய, உத்தரவுகளை முன் வைக்கும் திகதியிலிருந்து 04 நாட்களினுள் இயந்திரங்களை விநியோகிக்க வேண்டியிருப்பினும், 2022 ஒக்டோபர் 12 ஆம் திகதி உத்தரவுகள் முன் வைக்கப்பட்டிருப்பினும் கணக்காய்வு திகதியான 2023 நவம்பர் 24 ஆம் திகதியளவிலும் இயந்திரங்கள் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பெறுமதி ரூபா 6,452,850 ஆன மெகலம் விற்பனை நிலையத்தின் கூரையின் மறு சீரமைப்புடன் தொடர்புடைய பெறுகை செயற்பாட்டின் போது பெறுகை வழிகாட்டல் குறிப்பின் 5.4.8 ஆவது பிரிவின் பிரகாரம் செயலாற்றுகை பாதுகாப்பு ஒப்பந்தக்காரரினால் முன் வைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அங்குனகொலபெலெஸ்ஸ விற்பனை நிலையத்தின் மறு சீரமைப்புடன் தொடர்புடைய பெறுகை செயற்பாட்டின் போது பெறுகை வழிகாட்டல் குறிப்பின் 5.3.11 (அ) மற்றும் 5.4.8 (ஆ) இன் பிரகாரம், செயலாற்றுகை பாதுகாப்பு மற்றும் விலை மனு பாதுகாப்பு முன் வைக்கப்பட்டிருக்காமையால் இப் பெறுகையுடன் தொடர்புடைய பிரதானமான செலவு விலை மதிப்பீடு ரூபா 5,787,719 ஆகக் காணப்பட்டாலும், ரூபா 8,000,000 ஆன பணத் தொகைக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2018 ஆம் ஆண்டில் ரூபா 7,650,000 செலவிடப்பட்டு மானிட வளங்கள் தகவல் தொகுதி (Human Resource Information System) நிலை நாட்டப்பட்டிருந்தது. இத் தொகுதிக்குத் தேவையான தரவுகள் அத் தனியார்ப் பிரிவு நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட 389 விரல் அடையாளப் பதிவு இயந்திரங்களின் மூலம் கைப்படவும் (Manually), பிற தனியார்ப் பிரிவு நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட 68 விரல் அடையாளப் பதிவு இயந்திரங்களின் மூலம் தன்னியக்க அடிப்படையிலும் பதிவேற்றப்படுகின்றது. இரண்டு நிறுவனங்களினால் தரவுத் தொகுதி முற்று முழுதாக நேரலை ஓட்ட (Live Run) அடிப்படையில் 2023 ஜூலை 12 ஆம் திகதி வரை இயக்கப்பட்டிருந்தது. மேலும், இத் தொகுதியில் உள்ளடங்குகின்ற Mobile Application Module தற்சமயம் பயன்படுத்தப்படாதிருப்பதுடன், இது வரை ERP Integration செயற்பாடும் நிறைவு செய்யப்படவில்லை.

(உ) புதிதாக 100 விற்பனை நிலையங்களைத் திறக்கும் கோட்பாட்டை செயற்படுத்தும் பொருட்டு நிலையான சொத்துக்களை குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கு அமைச்சரவையினால் அனுமதி வழங்கப்படுவதற்கு முன் பெறுகையின் பிரதான செயற்பாடான விருப்புப் பிரேரணை கோரும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டிருந்தது. தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு வழங்குகை நிறுவனங்களினால் தொடர்புடைய விவரக் குறிப்பின் பிரகாரம் பண்டங்கள் பெறப்பட்டு முன் வைக்கப்படாதிருப்பினும், வர்த்தக அமைச்சின் செயலாளரின் அனுமதியுடன் வழங்கப்பட்டிருந்த பொருட்களுக்கு மாத்திரம் ரூபா 36,225,245 ஆன பணத் தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும், இத்தகைய அடிப்படையில் திறக்கப்பட்ட 42 விற்பனை நிலையங்களில் முறையே 18 விற்பனை நிலையங்களும், 24 விற்பனை நிலையங்களும் 2022 ஆம் ஆண்டு கால கட்டத்திலும், 2023 ஆம் ஆண்டின் ஏப்ரல் 30 ஆம் திகதியுடன் நிறைவடைந்த இறுதி 04 மாத கால கட்டத்திலும் நட்டத்தைத் தழுவியிருந்தன.

(ஊ) பெறுகை செயன் முறை பின்பற்றப்படாது கலந்தாலோசிப்பு வருட கால கட்டத்தில் விளம்பர செலவு தொடர்பாக தனியார் நிறுவனமொன்றுக்கு ரூபா 6,300,000 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது.

2.3 ஏனைய விடயங்கள்

(அ) 2021 ஜூலை 30 ஆம் திகதிய இலக்கம் 108 ஐ உடைய பணிப்பாளர் சபை தீர்மானத்தின் மூலம் பிரதிப் பொது முகாமையாளர் (விற்பனை) பதவி, Head of Online Trading என பெயர் மாற்றம் செய்யப்பட்டிருந்தது. எனினும், அனுமதிக்கப்பட்ட ஆட் சேர்ப்புத் திட்டத்தில் இத்தகையதொரு பதவி காணப்படாதிருந்ததுடன், புதிய பதவிப் பெயருக்கும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. இதனால், அனுமதிக்கப்படாத பதவிக்கு 2021 நவம்பர் 01 ஆம் திகதிலிருந்து 2023 மே 31 ஆம் திகதி வரை செலுத்தப்பட்டிருந்த அனுமதிக்கப்படாத சம்பளம் ரூபா 4,125,000.00 ஆகக் காணப்பட்டது.

(ஆ) 2022 ஆம் ஆண்டில் கம்பனியின் வசம் காணப்பட்ட 452 விற்பனை நிலையங்களில் 193 விற்பனை நிலையங்கள், அதாவது 43% ஆனவை நட்டத்தில் (வரி மற்றும் வட்டிக்குப் பிற்பாடு) இயங்கி வந்தன. அந் நட்டப் பெறுமதி ரூபா 287,762,471 ஆகக் காணப்பட்டதுடன், அவற்றுள் 109 விற்பனை நிலையங்கள் ரூபா 1,000,000 ஐத் தாண்டிய வகையில் நட்டத்தில் இயங்கி வந்துள்ளன.

(இ) அனுமதிக்கப்பட்ட 10 விற்பனை உதவியாளர்கள் தொடர்பாகவும் பதவி வெற்றிடம் காணப்பட்டதுடன், அனுமதிக்கப்பட்ட 7 தராதரப் பரீட்சிப்பு உத்தியோகத்தர் பதவிகளில் 6 பதவிகள் அதாவது நூற்றுக்கு 85 ஆன பதவி வெற்றிடங்கள் காணப்பட்டது. 183 விற்பனை உதவியாளர் பதவிகளில் வெற்றிடங்கள் உள்ளடங்களாக மேலதிகமாக மொத்தமாக 192 உதவியாளர்கள் காணப்பட்டனர். மேலும் பிரதான நிறைவேற்று அதிகாரி பதவிகள் மற்றும் மேலதிகமாக 8 பதவிகளுக்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட ஆட் சேர்ப்புத் திட்டம் காணப்படவில்லை.

(ஈ) 2022 ஆம் ஆண்டு காலப் பகுதிக்கான செயற்படு திட்டத்தின் விருத்தி தொடர்பாக கணக்காய்வுக்கு முன் வைக்கப்படாமையால் செயலாற்றுகையைப் பரீட்சிக்க முடியாத நிலை ஏற்பட்டது.

(உ) கம்பனியின் 114 விற்பனை நிலையங்களில் பாதுகாப்பு கமரா தொகுதி பொருத்தப்படாதிருந்ததுடன், 65 விற்பனை நிலையங்களில் பொருத்தப்பட்டிருந்த பாதுகாப்பு கமராக்களில் ஒரு சில கமராக்களே இயங்கு நிலையில் காணப்படுகின்றன. அவ்வாறே, விற்பனை நிலையங்களில் பொருத்தப்பட்டிருந்த கமராத் தொகுதிகள் பிரதான அலுவலகத்துடன் தொடர்புபட்டிருக்காமையால் விற்பனை நிலையங்களுடன் தொடர்புடைய நேரடி கட்டுப்பாட்டைத் தலைமை அலுவலகம் பேணுவதற்குத் தவறியிருந்தது. விற்பனை நிலையங்களில் பண்டக் கையிருப்பின் குறைப்பாடு காணப்பட்டமை தொடர்ச்சியாக நிலவி வந்திருப்பதுடன், இது தொடர்பாக பாதுகாப்புக் கமராத் தொகுதிகளில் நிலவுகின்ற இக் குறைபாடு தாக்கம் செலுத்தியிருந்தது. மேலும், 2016 ஆம் ஆண்டு கால கட்டத்தில் நிலை நாட்டப்பட்டுள்ள இப் பாதுகாப்பு கமராத் தொகுதி தொடர்பாகத் தொடர்புடைய ஒப்பந்தக்கார நிறுவனத்தின் 02 வருட ஒப்பந்த காலப் பகுதி நிறைவடைந்த பிற்பாடு பராமரிப்புச் செயற்பாடுகளுக்கு எவ்வித நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) கம்பனியின் கட்டிடங்களை வாடகைக்கு பெற்றுக் கொள்ளும் வழிகாட்டியின் 4.1 ஆவது பந்தியின் பிரகாரம், புதிய கட்டிடத்துக்கென வழங்கப்படுகின்ற வாடகை முற்பணத் தொகை 12 மாத கால சமமான தவணைகளின் கீழ் குத்தகை வாடகையிலிருந்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்தது. கலந்தாலோசிப்பு வருட இறுதியில் வாடகை முற்பணக் கணக்கில் 12 மாதத்தை விடத் தாண்டிய ரூபா 61,482,959 பெறுமதியான அறவிடப்பட வேண்டிய மீதி காணப்பட்டதுடன், அதில் ரூபா 34,164,927 ஆன தொகை 5 வருட காலப் பகுதியைத் தாண்டிய முற்பண மீதியாகக் காணப்பட்டதுடன், வழிகாட்டல் குறிப்பின் பிரகாரம் அப் பணத் தொகையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) கலந்தாலோசிப்பு வருட கால கட்டத்துக்கு உரிய நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் கிடைக்க வேண்டிய கையிருப்பு அழிவான ரூபா 342,327,235 இலிருந்து எத்தகைய பெறுமதியும் கணக்காய்வுத் திகதியளவிலும் மீள் அறவிடப்படவில்லை. முன்னைய ஆண்டு காலப் பகுதிகளின் கையிருப்பு அழிவுகளை அறவிடும் செயன் முறையைப் பரீட்சிக்கையில், 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் கையிருப்புக் குறைவான முறையே ரூபா 271,125,743 மற்றும் ரூபா 193,280,144 தொகையில் எவ்வித பெறுமதியும் அறவிடப்பட்டிருக்கவில்லை. 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டின் கையிருப்புக் குறைப்பாடான முறையே ரூபா 55,253,300 மற்றும் ரூபா 194,770,627 இல் அறவிடப்பட்டிருப்பது முறையே ரூபா 5,032,576 மற்றும் ரூபா 1,151,372 ஆன பெறுமதி மாத்திரமேயாகும். அதனடிப்படையில், இக் கையிருப்பு அழிவுப் பெறுமதியை அறவிடும் திறன் காணப்படுமா எனும் விடயம் கணக்காய்வுக்கு உறுதிப்படுத்தப்படவில்லை.

(ஏ) வருடாந்தம் செலுத்தப்பட்ட விழா முற்பணத்தை அடுத்த முற்பணம் செலுத்தப்படுவதற்கு முன் அறவிட வேண்டியிருப்பினும், 1 முதல் 6 வருட காலப் பகுதியினுள் அறவிடப்படாத விழா முற்பணங்களின் பெறுமதி ரூபா 4,474,277 ஆகக் காணப்பட்டது. மேலும், இப் பெறுமதியினுள் உள்ளடங்குகின்ற ரூபா 1,230,500 ஆன விழா முற்பணங்களை பெற்றுக் கொண்ட உத்தியோகத்தர்கள் தற்சமயம் பணியை விட்டு நீங்கிச் சென்றிருப்பதுடன், கம்பனியினால் அம் முற்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) கம்புருபிட்டிய பிரதேசச் செயலகத்துக்கு உரித்தான காணியொன்றின் நிறுவனத்தினால் ரூபா 22,748,813 செலவிடப்பட்டு கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டு 2014 ஆம் ஆண்டிலிருந்து விற்பனை நிலையமொன்று நடாத்தப்பட்டு வந்தாலும், அக் கட்டிடத்தை நிர்மாணிக்கும் பொருட்டு குறித்த காணி குத்தகை அடிப்படையில் கையேற்பதற்குத் தொடர்புடைய குத்தகை ஒப்பந்தமொன்று அல்லது கட்டிடத்தை நிர்மாணித்த பிற்பாடு அக் கட்டிடம் மற்றும் காணியை சட்ட ரீதியாகப் பயன்படுத்தும் பொருட்டு தொடர்புடைய குத்தகை தொடர்பாக ஒப்பந்தமொன்று ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஒ) பிற செலுத்த வேண்டிய மீதியின் கீழ் குறித்துக் காட்டப்பட்டுள்ள 5 வருட காலப் பகுதியைத் தாண்டிய ரூபா 10,440,757 ஆன போக்குவரத்துக் கட்டணம் மற்றும் 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு ரூபா 24,396,900 ஆன நிர்மாணிப்பு, ஒப்பந்த நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய தங்க வைத்தல் பணத் தொகையை கலந்தாலோசிப்பு கால கட்டத்தின் இறுதியிலும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஓ) பிற கிடைக்க வேண்டிய மீதியினுள் உள்ளடங்குகின்ற 2020 ஆம் ஆண்டில் முன் செலுத்தப்பட்ட ரூபா 1,469,104 ஆன களஞ்சியசாலைக் கூலியை கலந்தாலோசிப்பு வருடத்தின் இறுதியளவிலும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

டப்ளியூ. பீ. சீ. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

7.4 இலாபம் அல்லது நட்டம் மற்றும் விரிவான வருமானம் பற்றிய அறிக்கை

லங்கா சதொச லிமிடெட்

இலாபம் அல்லது நட்டம் மற்றும் முழுமையான வருமானக் கூற்று

2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டிற்கானது

(இலங்கை ரூபாயில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது)

	குறிப்பு	2022	2021
வருவாய்	**3**	57,164,922,663	40,850,538,912
விற்பனை கிரய செலவு	**4**	(49,843,377,168)	(35,961,364,850)
மொத்த இலாபம்		**7,321,545,496**	**4,889,174,063**
		12.8%	**12.0%**
ஏனைய வருமானம்	**5**	352,885,123	579,986,285
விற்பனை மற்றும் விநியோக செலவுகள்	**6**	(4,500,882,520)	(4,051,293,237)
நிர்வாக செலவுகள்	**7**	(2,044,706,261)	(1,897,384,744)
செயல்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து **(EBIT)** இலாபம் / (நட்டம்)		**1,128,841,838**	**(479,517,634)**
வட்டி வருமானம்	**8**	27,847,356	43,076,288
வட்டி செலவு	**9**	(1,192,133,707)	(403,839,931)
வரி விதிப்புக்கு முன்பான இலாபம் / (நட்டம்)		**(35,424,512)**	**(840,281,278)**
வருமான வரி செலவு	**10**	-	-
ஆண்டுக்கான இலாபம் / (நட்டம்) **(EAIT)**		**(35,424,512)**	**(840,281,278)**
அடிப்படை வருமானங்கள் / (இழப்பு) ஒரு பங்குக்கு (ரூபா.)	**11**	(0.40)	(9.40)
மற்ற விரிவான வருமானம் / (செலவு)			
ஏனைய விரிவான வருமானம் / (செலவு) இலாப மற்றும் நட்ட அறிக்கைக்கு மீள் பாடுபாடு செய்யலாகாது.			
ஓய்வூதிய பலன்களின் கீழான இயல்பான ஆதாயம் / (இழப்பு)			
மீள் மதிப்பீட்டு ஆதாயம்	**23**	56,626,291	9,226,791
		-	-
ஆண்டிற்கான விரிவான ஏனைய மொத்த வருமானம் / (செலவு).		**21,201,779**	**(831,054,487)**

7.5 நிதி நிலைக் கூற்று

லங்கா சதொச லிமிடெட்
நிதி நிலைக் கூற்று

2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டிற்கானது (இலங்கை ரூபாயில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது)

	குறிப்பு	2022	2021
சொத்துக்கள்			
நடப்பு அல்லாத சொத்துக்கள்			
ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள்	12	938,759,502	1,293,618,311
குத்தகை சொத்து	12	1,293,618,311	-
தொட்டுணர முடியாத சொத்துகள்	13	134,437,696	226,193,829
மொத்த நடப்பு அல்லாத சொத்துக்கள்		**1,342,493,078**	**1,519,812,140**
நடப்பு சொத்து			
இருப்புக்கள்	15	7,954,622,465	4,903,716,133
வர்த்தகம் மற்றும் பிற பெறத் தக்கவை	16	1,746,397,807	1,444,606,291
வைப்பு மற்றும் முற் பணங்கள்	17	152,934,985	209,116,667
நுகர்வு பங்குகள்	18	78,546,486	41,944,485
முன் கட்டண செலவுகள் மற்றும் சட்ட ரீதியான பெறுதல்கள்	19	36,433,215	41,944,485
நிலையான வைப்புகள்		500,000,000	500,000,000
வங்கிப் பிணை	20	10,000,000	-
காசும் காசுக்கு சமனானவைகளும்	21	353,917,688	274,967,368
மொத்த நடப்பு சொத்துக்கள்		**10,832,852,647**	**7,388,358,396**
மொத்த சொத்துக்கள்		**12,175,345,725**	**8,908,170,536**
உரிமை மூலதனம் மற்றும் பொறுப்புகள்			
உரிமை மூலதனம்			
கூறப்பட்ட மூலதனம்	22	893,752,720	893,752,720
உரிமை மூலதன உட் செலுத்துகை		5,739,364,265	3,443,618,559
நிறுத்தி வைத்த வருவாய் (பற்றாக)		(19,801,830,058)	(19,836,544,857)
மீள் மதிப்பிட்டு இருப்பு		558,873,306	558,873,306
மொத்த உரிமை மூலதனம்		**(12,609,839,767)**	**(14,940,300,272)**
நடைமுறை அல்லாத பொறுப்புகள்			
ஓய்வூதிய பலன்கள் பொறுப்புகள்	23	288,785,872	287,301,373
அரச மானியங்கள்	28	145,983,614	233,018,809
நிதிக் குத்தகை பொறுப்பு	25	230,503,574	-
வட்டியுடன் கூடிய கடன்கள் மற்றும் பெறுகைகள்	26	6,339,166,480	9,234,912,187
மொத்த நடைமுறை அல்லாத பொறுப்புகள்		**7,004,439,540**	**9,755,232,370**
நடைமுறை பொறுப்புகள்			
வர்த்தக மற்றும் பிற செலுத்த வேண்டியவை	24	11,069,605,694	9,134,462,290
அரச மானியங்கள்	28	117,350,571	112,264,578
நிதிக் குத்தகை பொறுப்பு	25	140,255,718	-
வட்டியுடன் கூடிய கடன்கள் மற்றும் பெறுகைகள்	26	1,288,779,375	1,347,238,502
சட்டப் படி செலுத்த வேண்டியவை	27	114,472,361	317,674,408
வங்கி மிகைப் பற்றுகள்	21	5,050,282,232	3,181,598,660
மொத்த நடைமுறை பொறுப்புகள்		**17,780,745,951**	**14,093,238,438**
மொத்தத் உரிமை மற்றும் பொறுப்புகள்		**12,175,345,725**	**8,908,170,536**

லங்கா சதொச லிமிடெட்
நிதி நிலைக் கூற்று

2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டிற்கானது (இலங்கை ரூபாயில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது)

நிறுவனத்தின் இந்த நிதி நிலை அறிக்கைகள் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைகளுக்கு இணங்குகின்றன என்பதை நான் சான்றளிக்கிறேன்.

……………………………………..
பிரதிப் பொது முகாமையாளர் - நிதி
Channa Kevitiyagala
Deputy General Manager - Finance
Lanka Sathosa Limited

……………………………………..
தலைவர்
Pasanda Yapa Abeywardana
Chairman
Lanka Sathosa Limited

இந்த நிதிநிலை அறிக்கைகளை தயாரித்தல் மற்றும் வழங்குவதற்குகான முழுப் பொறுப்பும் பணிப்பாளர் குழுவையே சாரும். சபையின் சார்பாக அங்கீகரிக்கப்பட்டு கையொப்பமிடப்பட்டது

……………………………………..
பணிப்பாளர்
Director
Lanka Sathosa Limited

2023/ 10/ 30
கொழும்பு

7.6 உரிமை மாற்றம் பற்றிய கூற்று

லங்கா சதொச லிமிடெட்
உரிமை மாற்றம் பற்றிய குறிப்புகள்
2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டிற்கானது

(இலங்கை ரூபாயில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது)

	நிலையான மூலதனம்	மீள் மதிப்பீட்டு ஒதுக்கம்	உரிமை மூலதன உட் செலுத்துகை	தக்கவைக்கப்பட்ட வருவாய் (பற்றாக)	மொத்தம்
2020 டிசம்பர் 31 இல் நிலவரப் படி மீதி	**893,752,720**	**558,873,306**	**1,147,872,853**	**(19,005,490,370)**	**(16,404,991,491)**
ஆண்டுக்கான இலாபம்/ (நட்டம்)	-	-	-	(840,281,278)	(840,281,278)
உரிமை மூலதன உட் செலுத்துகை	-	-	2,295,745,706	-	2,295,745,706
ஏனைய விரிவான வருமானம் / (செலவு)	-	-	-	9,226,791	9,226,791
மீள் மதிப்பீட்டு ஆதாயம்	-	-	-	-	-
2021 டிசம்பர் 31 இல் நிலவரப் படி மீதி	**893,752,720**	**558,873,306**	**3,443,618,559**	**(19,836,544,857)**	**(14,940,300,272)**
ஆண்டுக்கான இலாபம் / (நட்டம்)	-	-	-	(35,425,512)	(35,424,512)
முந்தைய ஆண்டின் சரிப்படுத்தல் - குத்தகை	-	-	-	13,513,020	13,513,020
உரிமை மூலதன உட் செலுத்துகை	-	-	2,295,745,706	-	2,295,745,706
ஏனைய விரிவான வருமானம் (செலவு)ஐஉெழஅந / (நுஓிநளெந)	-	-	-	56,626,291	56,626,291
மீள் மதிப்பீட்டு ஆதாயம்	-	-	-	-	-
2022 டிசம்பர் 31 இல் நிலவரப் படி மீதி	**893,752,720**	**558,873,306**	**5,739,364,265**	**(19,801,830,058)**	**(12,609,839,767)**

7.7 காசுப் பாய்ச்சல் கூற்று

லங்கா சதொச லிமிடெட்
காசுப் பாய்ச்சல் கூற்று
2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டிற்கானது

(இலங்கை ரூபாயில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது)	2022	2021
செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலமான காசுப் பாய்ச்சல்		
ஆண்டுக்கான இலாபம் / (நட்டம்) (EAIT)	(35,424,512)	(840,281,278)
சரி செய்தல்;		
தேய்மானம்	577,696,132	500,766,342
அசையா சொத்துக்களின் கடன் மறு சீரமைப்பு	64,025,447	65,086,239
அரசாங்க மானியத்தை கடனாக மாற்றுதல்	(133,481,004)	(381,975,212)
பணிக் கொடைக்கான ஏற்பாடு	72,289,344	41,774,957
வட்டி செலவு	1,192,113,707	403,839,931
வட்டி வருமானம்	(27,847,356)	(43,076,288)
முந்தைய ஆண்டின் சரி செய்கை - குத்தகை	13,513,020	-
அகர்ருகை இழப்பு	753,815	31,212,686
பணி மூலதனத்தில் ஏற்படும் மாற்றங்களுக்கு முன் செயலாற்றுகை இழப்பு	**(1,723,638,592)**	**(222,652,622)**
பணி மூலதனத்தில் மாற்றங்கள்		
இருப்புகள்	(3,050,906,332)	(7,884,197)
வர்த்தக மற்றும் பிற வரவுகள்	(359,032,018)	(406,922,828)
வைப்பு மற்றும் முற் பணம்	56,181,682	(57,037,564)
நுகர்வு பங்குகள்	(36,602,002)	(10,375,564)
முன் செலுத்தப்பட்ட செலவுகள் ரூ சட்ட ரீதியான வரவுகள்	(22,425,762)	7,359,191
வர்த்தகம் மற்றும் பிற செலுத்த வேண்டியவை	1,935,143,404	(375,809,735)
சட்ட ரீதியாக செலுத்த வேண்டியவை	(203,202,047)	106,766,919
செயற்பாடுகளில் பயன்படுத்தப்படும் பணம்	**42,795,518**	**(966,556,581)**
செலுத்தப்பட்ட பணிக் கொடை	(14,178,554)	(5,278,235)
செலுத்தப்பட்ட வட்டி	(829,787,908)	(222,197,988)
செயற்பாட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படும் நிகர பணம்	**(801,170,944)**	**(1,194,032,805)**
முதலீட்டு நடவடிக்கைகளின் மூலமான பணப் பரிமாற்றம்		
சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் சுவீகரிப்பு /CWIP இன் கீழ் உள்ளடக்கப்பட்ட	(133,431,567)	(149,258,689)
அசையாச் சொத்துக்களின் சுவீகரிப்பு	(3,482,000)	(232,399,000)
சொத்துக்களை அகற்றுவதன் மூலம் பெறப்பட்ட பணம்	6,878,000	-
பெற்றுக் கொள்ளப்பட்ட வட்டி	26,652,149	17,976,973
நிலையான வைப்புகளின் நிகர மாற்றங்கள்	-	364,422,505
நிகர பணப் பரிமாற்றம் / முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து (பயன்படுத்தப்படுகின்றது)	**(103,383,418)**	**741,789**

லங்கா சதொச லிமிடெட்
காசுப் பாய்ச்சல் கூற்று
2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டிற்கானது

(இலங்கை ரூபாயில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது)	2022	2021
நிதி நடவடிக்கைகளின் மூலமான பணப் பரிமாற்றம்		
கடன் மூலதன மீள் செலுத்துகை	(2,895,745,706)	(3,532,817,390)
பங்கு உட்செலுத்துகை - அரிசிக் கடன்	2,295,745,706	2,295,745,706
கடன் வட்டியை திருப்பிச் செலுத்துதல்	(1,136,811,745)	(1,558,406,198)
அரிசி கடனுக்காக பெறப்பட்ட அரச மானியம்	845,531,803	1,038,399,320
மூலதன திட்டங்களுக்கு பெறப்பட்ட அரச மானியம்	51,531,803	79,672,820
குத்தகை சொத்துக்களுக்கான திருப்பிச் செலுத்துதல்	(34,972,537)	0
வங்கி உத்தரவாதம்	(10,000,000)	-
நிதி நடவடிக்கைகளில் இருந்தான நிகர பணப் பரிமாற்றம்	**(885,178,886)**	**(1,677,405,742)**
இக் கால கட்டத்திற்கான பணத் தொகை மற்றும் பணத்திற்கு சமமான நிகர மாற்றங்கள்	**(1,789,733,252)**	**(2,870,696,753)**
ஆண்டின் தொடக்கத்தில் காசும் காசுக்கு சமமானவைகளும்	(2,906,631,293)	(35,934,540)
ஆண்டின் இறுதியில் காசும் காசுக்கு சமமானவைகள் (குறிப்பு21)	**(4,696,364,544)**	**(2,906,631,293)**

7.8 நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்

லங்கா சதொச லிமிடட்
நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்
2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டிற்கானது

1. நிறுவனம் பற்றிய தகவல்கள்

1.1. பொதுவான தகவல்கள

லங்கா சதொச லிமிடெட் என்பது இலங்கையில் அரசுக்கு சொந்தமான மிகப் பெரிய சில்லறை வலையமைப்பு வணிகமாகும். கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் மற்றும் பிரதான இடம் இல. 27, CWE செயலக கட்டிடம், வொக்ஸ்ஹால் வீதி, கொழும்பு 02 இல் அமைந்துள்ளது

1.2. முக்கிய செயல்பாடுகள் மற்றும் செயல்பாடுகளின் தன்மை

வேகமாக நகரும் நுகர் பொருட்கள் மற்றும் பொதுப் பொருட்களை காட்சியறை வலையமைப்பின் மூலம் விநியோகித்தல் நிறுவனத்தின் முக்கிய செயல்பாடு ஆகும்.

1.3. ஊழியர்களின் எண்ணிக்கை

2022 டிசம்பர் 31 இன் படி நிறுவனத்தின் பணியாளர் எண்ணிக்கை 3,213 (2021 டிசம்பர் 31 இன் படி 3,414 ஆகும்)

2. முக்கியமான கணக்கியல் கொள்கைகள்

2.1. தயாரிப்பின் அடிப்படை

2.1.1. இணக்க அறிக்கை

2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவனத்தின் நிதி அறிக்கைகள் இலங்கையின் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தினால் வகுக்கப்பட்ட இலங்கை கணக்கியல் தர நிலைகளின் படி தயாரிக்கப்பட்டுள்ளன. மேலும், கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க 2007 இன் இலக்கம் 07 ஐ உடைய சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் இந் நிதி அறிக்கைகள் பின்வரும் கூறுகளை உள்ளடக்கியுள்ளன :

- மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டு காலப் பகுதிக்கான நிறுவனத்தின் நிதி செயற் திறன் தொடர்பாகத் தகவல் வழங்கும் இலாபம் அல்லது நட்டம் மற்றும் பிற விரிவான வருமான அறிக்கை
- நிதி நிலை அறிக்கையானது ஆண்டு இறுதியில் நிறுவனத்தின் நிதி நிலை குறித்த தகவல்களை வழங்குகின்றது
- மதிப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டு காலப் பகுதியல் நிறுவனத்தின் பங்குதாரர்களின் பங்குகளில் ஏற்படும் அனைத்து மாற்றங்களையும் வெளிக் காட்டும் சமபங்கு மாற்றங்கள் பற்றிய அறிக்கைக்
- மதிப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளை வெளிக் காட்டும் நிறுவனத்தின் செயற் திறன் தொடர்பான தகவல்களை பயனர்களுக்கு வெளிக் காட்டும் காசுப் பாய்ச்சல் அறிக்கை மற்றும்
- கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களை உள்ளடக்கிய நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள். இந் நிதி நிலை அறிக்கைகள், காசோட்டம் பற்றிய தகவல்களைத் தவிர, கணக்கியலின் திரட்டு கொள்கை பின்பற்றப்பட்ட வண்ணம் தயாரிக்கப்பட்டுள்ளன.

லங்கா சதொச லிமிடட்
நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்
2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டிற்கானது

2.1.2. நிதி அறிக்கைகளுக்கான பொறுப்பு

2007 இன் இலக்கம் 07 ஐ உடைய கம்பனிகள் சட்டம் மற்றும் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தினதும்இ கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை, பணிப்பாளர் சபையின் பொறுப்பு அறிக்கை மற்றும் நிதி நிலை அறிக்கையின் சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிதி அறிக்கைகளுக்கான பொறுப்பை பணிப்பாளர் சபை ஒப்புக் கொள்கின்றது.

2.1.3. அளவீட்டின் அடிப்படை

நிதி நிலை அறிக்கையில் குறிக்கப்பட்டுள்ள பின்வரும் வகுதிகளைத் தவிர, நிறுவனத்தின் நிதி நிலை அறிக்கைகள் முன்னைய செலவின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன:

வகுதி	பொருள்	அளவீட்டின் அடிப்படை
சொத்துக்கள்	காணி மற்றும் கட்டிடம்	செலவு / மீள் மதிப்பீடு
பொறுப்புகள்	ஊழியர் பலன் பொறுப்பு	வரையறுக்கப்பட்ட பலன் பொறுப்பின் கீழன் நடப்பு மதிப்பு
சொத்துக்கள்	வழித் தோன்றல்கள்	FVOCI

2.1.4. நிதி அறிக்கைகளை முன் வைத்தல்

நிதி நிலை அறிக்கையின் பிரகாரம் நிறுவனத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தானாகத் தொகுக்கப்பட்டுள்ளன. நிதி நிலை அறிக்கைகளை பாதிக்கக் கூடிய பணவீக்கக் காரணிகளில் எத்தகைய மாற்றமும் செய்யப்படவில்லை.

2.1.5. பணிப்பாளர் சபை நிதி அறிக்கைகளுக்கு அனுமதி வழங்குதல்

2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவனத்தின் நிதி அறிக்கைகள் (ஒப்பீடுகள் உட்பட) 2023 அக்டோபர் 31 ஆம் திகதி வெளியிடுவதற்கு பணிப்பாளர் சபை அங்கீகரித்துள்ளது.

2.1.6. ஈடு செய்கை

நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புகள் ஈடு செய்யப்படுகின்றன. மேலும் அங்கீகரிக்கப்பட்ட தொகை ஈடு செய்யப்படுகையில் சட்ட ரீதியாகச் செல்லுபடியாகின்ற உரிமை இருக்கும் போது மாத்திரமே நிகர தொகையை, நிதி நிலைமை அறிக்கையில் சுட்டிக் காட்டப்படுகின்றது. மேலும் நிகர அடிப்படையில் தீர்க்கும் தருவாயில் அல்லது சொத்துக்களுடன் தொடர்புடையதாக அல்லது ஒரே நேரத்தில் பொறுப்பை தீர்ப்பதாக அமையும். எந்தவொரு கணக்கீட்டுத் தர நிலை அல்லது விளக்கப்படுத்துகை தேவைப்படும் சந்தர்ப்பத்தில் அல்லது அனுமதிக்கப்படாத விடத்து மற்றும் நிறுவனத்தின் கணக்கியல் கொள்கைகளில் குறிப்பாக வெளிப்படுத்தப்பட்டாலன்றி வருமானம் மற்றும் செலவுகள் இலாபம் அல்லது நட்டங்கள் மற்றும் பிற விரிவான வருமான அறிக்கைகளில் ஈடு செய்யப்படாது.

2.1.7. செயல்பாட்டு மற்றும் பொருள் விளக்கக் காட்சி பெறுமானம்

நிறுவனத்தின் நிதி அறிக்கைகள் இலங்கை ரூபாயில் (ரூ.) முன் வைக்கப்படுகின்றன. இது நிறுவனத்தின் செயற்பாட்டு மற்றும் விளக்கக் காட்சி பெருமானமாகக் காணப்படுகின்றது.

2.1.8. பொருள் மற்றும் திரட்டுகை

நிதி அறிக்கைகளில் ஒரே மாதிரியான உருப்படிகளின் கீழ் ஒவ்வொரு வகுதியும் ஒரு குழுவாக முன் வைக்கப்படுகின்றது. Sri Lanka Accounting Standard - LKAS 01 இன் கீழான ”நிதி அறிக்கைகளை முன் வைத்தல்” - டுமுயுளு 01 வகுதியின் மூலம் அனுமதிக்கப்படும் சந்தர்ப்பத்தில், அதன் வேறுபட்ட தன்மை அல்லது செயற்பாட்டு உருப்படிகள் தனித்தனியாக முன் வைக்கப்படுகின்றன.

லங்கா சதொச லிமிடட்
நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்
2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டிற்கானது

2.1.9 ஒப்பீட்டுத் தகவல்

நடப்பு ஆண்டு விளக்கக் காட்சிப்படுத்துகைக்கு இணங்க தேவையான இடங்களில் ஒப்பீட்டுத் தகவல் மீள் வகைப்படுத்தப்படுகின்றது.

முந்தைய ஆண்டுகளில் நிதி நிலை அறிக்கைகளின் விளக்கக் காட்சி மற்றும் வகைப்படுத்தல் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. சிறந்த விளக்கக் காட்சிக்கு பொருத்தமான மற்றும் நடப்பு ஆண்டுடன் ஒப்பிடத்தக்கது.

- பெறத்தக்க நிலையான வைப்புத்தொகை (குனு)
  வட்ட மீண்டும் வகைபடுத்தப்பட்டு மற்ற பெற்த்தக்கவற்றின் கீழ் வழங்கப்பட்டுள்ளது

  2021- ரூபா. 25,099,314
  2022- ரூபா. 26,294,521

- 2021 இல் இலாபம் மற்றும் நட்டம் அறிக்கையில் நேரடியாக அடையாளம் காணப்பட்ட பங்குப் பற்றாக்குறை / பங்கு பற்றாக்குறைக்கான ஒதுக்கீடு ஆகியன விற்பனை மற்றும் விநியோகச் செலவின் கீழ் சுட்டிக் காட்டப்பட்டிருப்பதுடன், பற்றாக்குறைக்கான மீட்டெடுக்கப்பட்ட தொகை பிற வருமானத்தின் கீழ் முன் வைக்கப்பட்டுள்ளது

  2022 இல் பங்கு பற்றாக் குறையின் கீழ் மீள் பெறக் கூடிய தொகை கண்டறியப்பட்டு பிற பெறத்தக்கவற்றின் கீழ் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.
  2022 - ரூபா. 342,327,235

- நிர்வாகச் செலவுகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சாதாரண தொழிலாளர்களுக்கான செலவு மீள் வகைப்படுத்தப்பட்டு விற்பனை மற்றும் விநியோகச் செலவின் கீழ் முன் வைக்கப்பட்டுள்ளது.

  2021- ரூபா. 344,535,200
  2022- ரூபா. 398,883,468

- கடன்களை திருப்பிச் செலுத்துவதற்காக திறைசேரி செலுத்த வேண்டிய தொகைகள் கடன் பொறுப்புகளின் கீழ் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. அவை மீள் வகைப்படுத்தப்பட்டு பிற பெறத்தக்கவைகளின் கீழ் முன் வைக்கப்பட்டுள்ளன. நடப்பு மற்றும் நடப்பு அல்லாத கடன் பொறுப்பு பின்வருமாறு மீள் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

திறைதுசரி வரகூகள்

2021- ரூபா. 751,389,967
2022- ரூபா. 692,954,259

கடன் போறுப்பு	**2021**	**2022**
நடப்பு அல்லாத பொறுப்பு	ரூபா. 9,234,912,187	ரூபா. 6,339,166,480
நடப்புப் பொறுப்பு	ரூபா. 1,347,238,502	ரூபா. 1,288,779,375

- அட்டை கட்டுப்பாட்டுத் தொகை வைப்பில் இடப்பட்டுள்ளது. மேலும் முற் பணம் மீள் சரி செய்யப்பட்டு பணம் மற்றும் அதற்குச் சமமானவைகளின் கீழ் முன் வைக்கப்பட்டுள்ளன.

அட்டை கட்டுப்பாட்டு

2021 - ரூபா. 19,659,950
2022 - ரூபா. 73,382,849

லங்கா சதொச லிமிடட்
நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்
2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டிற்கானது

- வருவாயில் இருந்து கழிக்கப்படும் விற்பனை விலைக் கழிவு நிறுவனத்தின் நிகர விற்பனைக் கழிவின் கீழ் செலவாக சரிசெய்யப்பட்ட பிற்பாடு வருவாய் மற்றும் விளம்பர வருமானக் கணக்கிற்கு இடையே மீள் சரி செய்யப்பட்டுள்ளது.

	2021 (ரூபா.)	**2022** (ரூபா.)
விற்பனை தள்ளுபடி	17,175,735	51,236,501
விளம்பர வருமானம	9,930,926	18,438,997

- ஒப்பீட்டுப் புள்ளி விவரங்களின் தர நிலைகள் மற்றும் சிறந்த விளக்கக் காட்சிக்கு ஏற்ப நிதியோட்ட அறிக்கையில் மீள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

கணக்கு	**2021** (ரூபா.)	**2022** (ரூபா.)
அகற்றுகை இழப்பு	31,212,686	753,814.00
வர்த்தக ரீதியாகப் பெறத்தக்கவை மற்றும் பிற பெறத்தக்கவை	(406,922,827)	(359,032,018)
PPE கையகப்படுத்தல்	(149,258,689)	(104,071,969)
பெறப்பட்ட வட்டி	17,976,973	26,652,149
நிலையான வைப்பின் நிகர மாற்றங்கள்	364,422,505	-
செலுத்தப்பட்ட வட்டி	(742,204,861)	(1,179,961,771)
மீள் செலுத்தப்பட்ட கடன் மூலதனம்	(3,532,817,390)	(2,895,745,706)
பணம் மற்றும் பணத்திற்கு சமமானவை	(2,906,631,293)	(4,696,364,544)

2.2 குறிப்பிடத்தக்க கணக்கியல் தீர்ப்புகள் மதிப்பீடுகள் மற்றும் அனுமானர்கள்

நிறுவனத்தின் நிதி நிலை அறிக்கைகளைத் தயாரிப்பதற்கு, வருவாய்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் மற்றும் அதனுடன் இணைந்த வெளிப் பாடுகள், தற்செயலான பொறுப்புகளை வெளிப்படுத்துதல் ஆகியவற்றைப் பாதிக்கும் மதிப்பீடுகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்களை நிர்வாகம் செய்ய வேண்டும்.

இந்த அனுமானங்கள் மற்றும் மதிப்பீடுகள் பற்றிய நிச்சயமற்ற தன்மை, எதிர்க் காலங்களில் பாதிக்கப்படும் சொத்துக்கள் அல்லது பொறுப்புகளின் சுமந்து செல்லும் அளவிற்கு பொருள் சரி செய்தல் தேவைப்படும் விளைவுகளை ஏற்படுத்தலாம். நிறுவனத்தின் கணக்கியல் கொள்கைகளைப் பயன்படுத்தும் செயல்பாட்டில், நிர்வாகம் பின்வரும் தீர்ப்புகள் மற்றும் அனுமானங்களைச் செய்திருக்கிறது, எதிர் காலம் மற்றும் பிற முக்கிய ஆதாரங்கள் பற்றிய கணிப்பு நிச்சயமற்ற அறிக்கை திகதியில், அடுத்த நிதியாண்டிற்குள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் சுமந்து செல்லும் அளவுகளில் பொருள் சரி செய்தலை ஏற்படுத்தும் குறிப்பிடத்தக்க ஆபத்து உள்ளது.

தற்போதுள்ள சூழ் நிலைகள் மற்றும் எதிர் கால வளர்ச்சிகள் பற்றிய அனுமானங்கள் நிறுவனத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சூழ் நிலைகள் காரணமாக மாறலாம் மற்றும் அவை நிகழும் போது மற்றும் அனுமானங்களில் பிரதிபலிக்கும். கணிசமான பரிபாலிப்புத் தீர்ப்பு மற்றும் அல்லது மதிப்பீடுகளுடன் நிதி நிலை அறிக்கைகளில் அங்கீகரிக்கப்பட்ட தொகைகளில் மிகவும் குறிப்பிடத் தக்க விளைவைக் கொண்ட உருப் படிகள் சம்பந்தப்பட்ட தீர்ப்புகள் மதிப்பீடுகள் தொடர்பாக கீழே தொகுக்கப்பட்டுள்ளன

லங்கா சதொச லிமிடட்
நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்
2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டிற்கானது

2.2.1. தீர்ப்புகள் மற்றும் மதிப்பீடுகளின் பயன்பாடு

இந் நிதி நிலை அறிக்கைகளைத் தயாரிப்பதில், நிறுவனத்தின் கணக்கியல் கொள்கைகளின் பயன்பாடு மற்றும் சொத்துக்கள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவுகள் ஆகியவற்றின் அறிக்கை அளவியல் செயற்பாட்டைப் பாதிக்கும் தீர்ப்புகள் மற்றும் மதிப்பீடுகள் நிர்வகிக்கப்பட்டுள்ளன. இம் மதிப்பீடுகளிலிருந்து உண்மையான முடிவுகள் வேறுபடலாம். மதிப்பீடுகள் மற்றும் அடிப்படை அனுமானங்கள் தொடர்ந்து மதிப்பீடு செய்யப்படுகின்றன. மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள் எதிர்க் காலத்தில் அங்கீகரிக்கப்படும்.

2.2.1.1 தீர்ப்புகள்,

நிதி அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட தொகைகளின் கீழ் மிகவும் குறிப்பிடத்-தக்களவான விளைவுகளை தன்னகத்தே கொண்ட கணக்கியல் கொள்கைகளைப் பயன்படுத்துகையில் எடுக்கப்பட்ட முடிவுகள் தொடர்பான தகவல்கள் பின்வரும் குறிப்புகளில் சேர்க்கப்பட்டுள்ளன:

ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்புகள்: காணிகளை வணிகச் சொத்துக்களாக அல்லது முதலீட்டுச் சொத்-துக்களாக கருத வேண்டுமா எனும் விடயம் தொடர்பாகத் தீர்மானித்தல்.

2.2.1.2 . அனுமானர்கள்

2022 டிசம்பர் 31 இல் இருந்த படியான அனுமானங்கள் மற்றும் கணிப்புகளின் நிச்சயமற்ற தன்மைகள் பற்றிய தகவல்கள், அடுத்து வரும் நிதியாண்டில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் கீழ் முன் கொண்டு செல்லும் அளவுகளின் கீழான பொருள் சரிசெய்தலின் போது கணிசமான அளவில் அபாயத்தை உண்டு பண்ணியுள்ளது. அவை பின்வரும விடயங்களின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளன.

- வரையறுக்கப்பட்ட சாதகமான விடயங்களின் அளவீடு : பிரதானமான நடைமுறை அனுமானங்கள்
- சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் உண்மையான மதிப்பை நிர்ணயித்தல் : பிரதானமான மதிப்பீட்டு அனுமானங்கள்
- அருவச் சொத்துக்களின் குறைப்பாட்டுச் சோதனை : மீட்டெடுக்கக் கூடிய தொகைகளின் அடிப்படையில-ான முக்கிய அனுமானங்கள் மற்றும்
- ஒழுங்கு விதிகள் மற்றும் தற்செயல்களின் அங்கீகாரம் மற்றும் அளவீடு : வள வெளியேற்றுகைக்கான வாய்ப்பு மற்றும் அளவு பற்றிய முக்கியமான அனுமானங்கள

லங்கா சதொச லிமிடட்
நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்
2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டிற்கானது

2.2.2. முன் சேல்லும் தூகாட்பாடு

மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் நிறுவனம் ரூ. 35,424,512 பெறுமதியான நிகர இழப்பைச் சந்தித்துள்ளது. திரட்டப்பட்ட இழப்புகள் ரூ. 19,801,830,058 ஆகவும், நிறுவனத்தின் நடப்பு ரீதியான கடன்கள் அதன் நடப்புச் சொத்துக்களை விட ரூ. 6,947,893,304 ஆகவும் காணப்பட்டது. எனினும், நிறுவனத்தின் நிதி அறிக்கைகள், திறைசேரி நிறுவனத்தின் கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தொடர்ந்து நிதியை வெளியிடும் எனும் அனுமானத்தின் அடிப்படையிலும், நடப்பு செயற்பாடுகளின் அடிப்படையிலும் தயாரிக்கப்பட்டது.

நிறுவனத்தின் செயற்பாடுகளைத் தொடர்ச்சியாக முன்னெடுக்கும் பொருட்டு நிறுவனம் பல முன்னெடுப்பு செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளது. அவற்றுள், நஷ்டத்தில் இயங்கும் விற்பனை நிலையங்களை மூடுதல் அல்லது மாற்றுதல், நிதிச் சாத்தியக்கூற்றுகளின் அடிப்படையில் புதிதாக விற்பனை நிலையங்களைத் திறத்தல், விற்பனையை அதிகரிக்கும் நோக்கில் புதிய விற்பனை ஊக்குவிப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்துதல், விற்பனைக்கான இலக்குகளை வழங்குதல், லங்கா சதொச வர்த்தக பெயர் நாமத்தின் கீழ் பொருட்களை வழங்குதல், ஊழியர்களின் பணி ஊக்குவிப்பை அதிகரிக்கும் பொருட்டு பயிற்சித் திட்டங்களை நடாத்துதல், ஊக்கத் தொகை கொடுப்பனவு வழங்குகை போன்ற விடயங்களை சுட்டிக் காட்டலாம்.

முன்னைய ஆண்டு காலப் பகுதிக்கான செயற்பாடுகளின் தொடர்ச்சி குறித்து நிச்சயமற்ற தன்மை காணப்பட்டாலும், தற்சமயம் நிறுவனம் இயக்க இலாபத்தை அடைந்துள்ளது. மேலும், நடப்பு நிலவரப் படி, முன்னைய ஆண்டுகளில் தழுவிய நிகர இழப்பைக் குறைப்பதற்கு வாய்ப்பு கிடைத்துள்ளது.

கடந்த 4 வருட காலப் பகுதிக்கான இலாபம் .

Year	Loss(Rs)
2019	3,158,544,037
2022	1,387,666,643
2021	840,281,278
2022	35,424,512

2.2.3. நடப்பு மற்றும் நடப்பு அல்லாத வகைப்பாடு.

நிறுவனம் நடப்பு / நடப்பு அல்லாத வகைப்பாட்டின் அடிப்படையில் நிதி நிலை அறிக்கையில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை வெளிக் காட்டுகின்றது. ஒரு சொத்து தற்போதையதாக இருக்கும் போது:

- இது சாதாரண சுழற்சியில் தீர்க்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.
- இது முதன்மையாக வர்த்தக நோக்கத்திற்காக நடத்தப்படுகின்றது.
- இது அறிக்கையிடல் காலத்திற்குப் பிறகு பன்னிரண்டு மாதங்களுக்குள் தீர்க்கப்பட வேண்டும், அல்லது
- அறிக்கையிடல் காலத்திற்குப் பிறகு குறைந்த பட்சம் பன்னிரண்டு மாதங்களுக்கு பொறுப்புத் தீர்வை ஒத்திவைக்க நிபந்தனையற்ற உரிமை இல்லை.

நிறுவனம் மற்ற அனைத்து பொறுப்புகளையும் நடப்பு அல்லாதவை என வகைப்படுத்துகின்றது.
ஒரு பொறுப்பு நடைமுறையாக கருதப்படும் போது:

- இது சாதாரண சுழற்சியில் தீர்க்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.
- இது முதன்மையாக வர்த்தக நோக்கத்திற்காக நடத்தப்படுகின்றது.
- இது அறிக்கையிடல் காலத்திற்குப் பிறகு பன்னிரண்டு மாதங்களுக்குள் தீர்க்கப்பட வேண்டும், அல்லது
- அறிக்கையிடல் காலத்திற்குப் பிறகு குறைந்த பட்சம் பன்னிரண்டு மாதங்களுக்கு பொறுப்புத் தீர்வை ஒத்திவைக்க நிபந்தனையற்ற உரிமை இல்லை.

நிறுவனம் மற்ற அனைத்து பொறுப்புகளையும் நடப்பு அல்லாதவை என வகைப்படுத்துகின்றது.

லங்கா சதொச லிமிடட்
நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்
2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டிற்கானது

2.2.4. நிதிக் கருவிகளின் நியாயமான பெறுமதி

நிதி நிலை அறிக்கையில் பதிவு செய்யப்பட்ட நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புகளின் நியாயமான பெறுமதிகள் செயலில் உள்ள சந்தைகளில் இருந்து பெற முடியாத நிலையில், அவை கணித மாதிரிகளைப் பயன்படுத்துவதை உள்ளடக்கிய பல்வேறு மதிப்பீட்டு நுட்பங்களைப் பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகின்றன. இந்த மாதிரிகளுக்கான உள்ளீடுகள் சாத்தியமான இடங்களில் காணக் கூடிய சந்தைத் தரவிலிருந்து பெறப்படுகின்றன, ஆனால் இது கிடைக்கவில்லை என்றால், நியாயமான பெறுமதிகளை நிறுவுவதற்கு தீர்ப்பு தேவைப்படுகிறது. தீர்ப்புகளில் தள்ளுபடி விகிதங்களுக்கான ஏற்ற இறக்கம் போன்ற மாதிரி உள்ளீடுகள் அடங்கும். நிதிக் கருவிகளின் மதிப்பீடு குறிப்பு 34 இல் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளது.

2.2.5. நிதிச் சோத்துக்களில் குறைபாடு இருப்புகள்

SLFRS 9 இன் கீழ் அனைத்து வகையான நிதிச் சொத்துக்களிலும் உள்ள குறைபாடு இழப்புகளை அளவிடுவதற்கு தீர்ப்பு தேவைப்படுகிறது. குறிப்பாக, எதிர்கால காசுப்பாய்ச்சல்களின் அளவு மற்றும் நேரத்தை மதிப்பிடுதல் மற்றும் குறைபாடு இழப்புகளை நிர்ணயிக்கும் போது இணை மதிப்புகள் மற்றும் கடன் அபாயத்தில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு மதிப்பீட்டை வெளிப்படுத்துகின்றது.

2.2.6. வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தர்கள் இருந்து வருவாய்

அ) போருட்களின் விற்பனை

உரிமையின் கீழான குறிப்பிடத்தக்க அபாயங்கள் மற்றும் வெகுமதிகள் வாடிக்கையாளருக்கு மாற்றப்படுமாயின் அவற்றின் மூலமான வருமானம் அங்கீகரிக்கப்படுகின்றது. பரிசீலனையை மீட்டெடுத்தல் சாத்தியப்படும் மற்றும் தொடர்புடைய செலவுகள் மற்றும் பொருட்களின் சாத்தியமான வருவாயை நம்பத் தகுந்த முறையில் மதிப்பிட முடியும். பொருட்களுடன் தொடர்ச்சியாக நிர்வாகத்தில் ஈடுபாடு காணப்படுவதில்லை. மேலும் வருவாயின் அளவை நம்பகத் தன்மையுடன் அளவிட முடியும். வருமானம், வர்த்தகத் தள்ளுபடிகள் மற்றும் தொகுதி சார் தள்ளுபடிகள் ஆகியவை நிகரமாக அளவிடப்படும்.

நம்பகத் தன்மை திட்டத்திற்கும், விற்பனையின் ஏனைய கூறுகளுக்கும் இடையே வருமானம் ஒதுக்கப்படுகின்றது. நம்பகத் தன்மை திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை ஒத்தி வைக்கப்படுகின்றது. மேலும் திட்டத்தின் கீழான விதிமுறைகள் தள்ளுபடி செய்யப்பட்ட தயாரிப்புகளை வழங்குவதற்கான தனது கடமைகளை நிறுவனம் நிறைவேற்றுகையில் அல்லது திட்டத்தின் கீழ் புள்ளிகள் அல்லது அது இருக்கும் போது அது சாத்தியமின்றி காணப்படுகையில் அது வருமானமாகக் கருதப்படும். திட்டத்தின் கீழான சுட்டிகள் இனியும் மீட்டெடுக்கப்படாது.

ஆ) வட்டி வருமானம்

வட்டி வருமானம் அது ஈட்டப்படும் போது பரந்து பட்ட வருமான அறிக்கையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பயனுள்ள வட்டி விகித செயன் முறையைப் பயன்படுத்தி வட்டி வருமானம் திரட்டப்படுகின்றது. செயற்படுத்துகை வட்டி விகிதம், நிதிச் சொத்தின் கீழ் எதிர்பார்க்கப்படும் ஆயுட் காலத்தின் மூலம் அச் சொத்தின் நிகர சுமந்து செல்லும் தொகை சார்பாக மதிப்பிடப்பட்ட எதிர்கால மொத்த பற்றுச் சீட்டுக்களை சரியாகக் குறைத்துக் காட்டுகின்றது. ஒவ்வொரு கால கட்டத்திலும் வட்டி வருவாயைத் தீர்மானிக்கும் பொருட்டு இச் செயன் முறை அசல் நிலுவைத் தொகைக்கு நிகராக இவ் விகிதத்தின் கீழ் சுட்டிக் காட்டுகின்றது.

இ) ஏனைய வருமானம்

திரட்டல் அடிப்படையில் பிற வருமானம் அங்கீகரிக்கப்படுகின்றது.

ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் மற்றும் பிற நடப்பு அல்லாத சொத்துக்களை அகற்றுவதில் வருவாய் இயல்புடைய நிகர இலாபங்கள் மற்றும் இழப்புகள் வருமான அறிக்கையில் கணக்கிடப்பட்டதுடன், அப்புறப்படுத்தப்பட்ட வருமானம், சொத்துக்களை எடுத்துச் செல்லும் தொகை மற்றும் தொடர்புடைய விற்பனைச் செலவுகள் ஆகியவற்றிலிருந்து கழிக்கப்பட்டது.

லங்கா சதொச லிமிடட்

நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டிற்கானது

தற்செயலான செயல்பாடுகளிலிருந்து முக்கிய வருவாயை உருவாக்கும் செயல்பாடுகளிலிருந்து எழும் ஆதாயங்கள் மற்றும் இழப்புகள் மற்றும் பொருள் அல்லாத ஒத்த பரிவர்த்தனைகளின் குழுவிலிருந்து எழுவது ஆகியவை ஒருங்கிணைக்கப்பட்டு, அறிக்கையிடப்பட்டு, நிகர அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

ஈ) மானியங்கள்

மானியங்களில் இருந்து பரிமாற்றம் செய்யாத வருவாயை அங்கீகரிக்கையில் மாற்றப்பட்ட சொத்தைப் பயன்படுத்துவதற்கு விதிக்கப்பட்ட ஏதேனும் நிபந்தனைகளுடன் மானியம் கிடைக்கப் பெறுகின்றதா எனும் விடயத்தில் அது தங்கியுள்ளது. “நிபந்தனைகளாக காணப்படுகின்ற

